www.tamilarangam.net



# சமர்

## தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் பாரிய பின்னடைவை நோக்கி....

கடந்த 15 வருடகால தேசிய விடுதலைப் போரட்டமானது இன்று முன்னொரு போதும் இல்லாத ஒரு பின்னடைவை சந்தித்துள்ளது.



யாழ் குடாநாட்டை முற்றுமுழுதாகவே இராணுவம் கைப்பற்றியுள்ள நிலையும், சிங்களப் பெரும்தேசிய இனவாதிகள் தமது இனவெறிக் கொடிகளை உயரப் பறக்கவிட்ட நிலையில் தமிழ் மண்ணானது சூறையாடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடந்தகால எண்ணற்ற வெற்றிப் பிரகடனங்கள் எல்லாம் எந்த எதிர்பார்ப்பின்றியும் நொருங்கிப்போய் உள்ளது. நாம் முன்பு குறிப்பிட்டதுபோல் இப் போராட்டம் வீங்கவைத்த வெற்றிப் பிரகடனங்கள் தான் என்பதை வரலாறு தெளிவாகவே உறுதி செய்துள்ளது.

போராடும் புலிகளை விட அதை அண்டிப்பிழைத்த ஒரு பிரிவு எப்பொழுதும் போராடும் போராளிகளின் அபிப்பிராயத்திற்கு முன்பே முந்திக்கொண்டே முடிவுகளை அறிவித்துவிடும் போக்கு போராட்ட அமைப்பையே அதன் தளத்தில் சிதைத்து சீரழித்து வந்தது.

தொடர்ச்சியான முகம்கொடுக்க முடியாத மக்கள் விரோத நடவடிக்கைகள் எப்பொழுதும் வெற்றியைப் பிரகடனம் செய்து அரசியல் நடத்திய புலிகளின் நிலைகளை நாம் சென்ற இதழில் குறிப்பிட்டதுடன், அதன் தொடர்ச்சியில் புலிகள் தாமாகவே பின்வாங்கிச் செல்ல உள்ளதையும் சரியாகவே சுட்டிக்காட்டியுள்ளோம்.

இனவெறி சிங்கள பாசிச சந்திரிகா அரசு புலிகளை மிகத் திட்டமிட்ட முறையில் அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவதிலும் பின் இராணுவ ரீதியில் பின்வாங்க வைத்ததிலும் வெற்றி பெற்றது என்பது ஒரு தற்செயலான விபத்துமல்ல. மாறாக நரித்தனத்துடன் கூடிய ஒரு மிக மோசமான எல்லாவித மோசடியுடன் கூடிய ஒரு சதிகாரனின் அழகிய பாத்திரத்தை சந்திரிகா மிகத் திறமையாகவே கையாண்டிருந்தார்.

வங்குரோத்து அரசியலுடன் கூடிய, எப்பொழுதும் படுகொலைகள் மூலமும் வெடிகுண்டுகள் மூலமும் அரசியல் நடத்தும் புலிகளின் ராஜதந்திரமற்ற செயல் முறை, இலங்கை தலைவர்களுக்குள் மிக மோசமான ஒரு சந்திரிகா தலைமையை இனம் காணாமல் போனது என்பது புலிகளை விட தமிழ் மக்கள் தங்கள் சொந்த தேசிய அடையாளங்களை இழக்கும் நிலைக்குள் நகர்த்தியுள்ளது.

தொடர்ச்சி பக்: 6 இல்

### உள்ளே



www.tamilarangam.net

18- 07- 1988ல் விமலேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டான். ஏன்?

பின்தங்கிய மாவட்டமான கிளிநொச்சியில் பிறந்த விமலேஸ்வரன், மக்களின் துன்ப துயரங்களைக் கண்டு அதற்கெதிராகப் போராட உணர்ந்து P.L.O.T இன் மாணவர் அவையான TESO வில் இணைந்தான்.

பல்கலைக்கழக வாழ்வும் அதற்கூடாக மாணவர்கள் மத்தியில் தீவிரமாக செயற் பட்டான். P.L.O.T மக்கள் விரோத அராஜகத்தை இனம்கண்ட அவன் 84 இறுதிகளில் அவ்வியக்கத்தை விட்டு விலகியது மட்டுமன்றி, தனது சக TESO நண்பர்களையும் விழிப்புற வைத்து இயக்கத்திலிருந்து விலகினார். விலகிய அவன் P.L.O.Tஇன் அராஜகத்திற்கு எதிராக உரத்துக் குரல் கொடுத்தான். அத்துடன் விடுதலையின் பெயரால் இயங்கிய அனைத்து இயக்க அராஜகம், மக்கள் விரோத அரசியலை விமர்சித்தான்.

இக்காலத்தில் பல்கலைக்கழகம் ஊடாக வன்னியில் குடியேறிய இந்திய வம்சாவழி மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு அவர்களின் வாழ்விடங்களில் நின்று அங்கு தங்கி உதவிகளைச் செய்ததுடன் தானும் செயற்பட்டான்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது புலிகள் காலம் காலமாக நடத்திய வன்முறைகளை எதிர்த்து நின்று, இறுதியில் அவர்களுக்கான ஒரு புதிய தலைமையை நிறுவுவதில் ஈடுபட்டும் பின் அதன் செயலாளர் ஆனான். மாணவர்களின் நலன்களை விட்டுக் கொடுக்காது உறுதியான தலைவன் என்பதை மீள மீள நிறுவினான். விஜிதரன் போராட்டம் எழுந்தபோது அதை முன்நின்று நடத்தியதுடன் மட்டுமின்றி தானும் பங்கேற்று செயற்பட்டான். சாகும் வரை போராட்ட வடிவத்தை ஆரம்பம் முதலே எதிர்த்த அவன், மாறாக மக்களிடம் சென்று முறையிட்டு அவர்களை ஒன்றிணைத்து நகர் போராட்ட வழிமுறைகளைப் பிரேரித்தான். இருந்தபோதும் பெரும்பான்மை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை கோரியபோது, மாணவர்களின் இயல்பான பூர்சுவா ஊசலாட்டத்தை உணர்ந்து அதுபற்றி சிலருடன் கதைத்ததுடன் இறுதிவரை சாகும் வரை இருக்கவேண்டும் என்ற உறுதியுடன் தானே சாகுவரை உண்ணாவிரத்தில் குதித்தான். இக்காலத்தில் உண்ணாவிரம் இருந்தவர்கள் தலைமைதாங்கியோர். மாணவர்கள் ஊசலாடியபோது உண்ணாவிரம் இருந்தபடியே தனது உரத்தகுரலை உயர்த்தி அவர்களை போராட்டத்தின் பால் வென்றெடுத்தான். போராட்டத்தை தொடர்வதில் பலவேறு ஊசலாட்டத்தையும் மீறி நடத்திய விமலேசின் பங்கு தனித்துவமானது

# 3 வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்ட விமலேஸ்வரன்

அத்துடன் சிவத்தம்பி முதல் பல்வேறு மாக்சிச வேசமிட்ட பேராசிரியாகளின் சதியை முறியடிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டான் .

இக்காலத்தில் NLFT யின் மாணவர்கள் அமைப்பான புதிய ஜனநாயக மாணவர் சங்கத்தில் இணைந்திருந்த போதும் அவரால் தொடர்ந்து இயங்கமுடியாத வகையில் தலைமறைவு வாழ்க்கை எதிர்கொண்டான் . புலிகள் தேடத்தொடங்கிய பின் தனது தலைமறைவு வாழ்க்கையை தாழ்த்தப்பட்ட பின்தங்கிய ஒரு கிராமத்தில் தொடங்கினான். அங்கு அவன் அவர்களுள் ஒருவராகிய பின் அவர்களுடன் கல்தோண்டச் சென்றது முதல், அவர்களின் எல்லாவிதமான சாதியத்துக்கு உட்பட்ட வேலைகளிலும் ஈடுபட்டதுடன், கூலிக்கும் வேலை செய்தான். அந்த மக்களின் பிள்ளைகளின் நலன்களில் அக்கறை கொண்டு பாடம் சொல்லிக் கொடுத்து ஒரு "கண்ணாடி மாஸ்ரர்" ஆனான்.



இந்திய இராணுவம் தனது ஆக்கிரமிப்பை நடத்திய காலத்தில் தனது இரண்டுவருட தலைமறைவை விட்டு நான் இந்திய இராணுவத்திற்கு எதிராவன் என்பதால் புலிகள் தனது அரசியல் நிலையில் படுகொலை செய்யமாட்டார் எனநம்பி வெளிவந்தான். நான் மக்களின் நண்பன். எதிரிகளின் எதிரி எனப் பறைசாற்றி புலிகள் அதை அனுமதிப்பர் எனநம்பி வெளிவந்தான். ஆனால் புலிகள் எதிரியின் எதிரிகளைக் கூட விட்டுவிடாத, அரசியல் அநாதைகள் ஆகிவிட்ட புலிகள், படுகொலையின் மூலம் விமலேஸ்வரனை கொன்றனர். விமலேஸ்வரன் வாழ்வு, செயல்கள், எம்மண்ணின் பரட்சிகர வாழ்வின் ஒரு நினைவுக்கு உட்பட்ட ஒரு வழிகாட்டியாகவும் எம்முன் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்களின் எதிரி யார்? இதை மறுப்பது ஒரு திசைவிலகலாகும்

தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியின் ஆரம்பம் முதலே உருவான மக்கள் விரோத நடவடிக்கைகள், அப் போராட்டத்தையும், போராடிய சக்திகளையும் பல பரிணாமங் கொண்ட சிந்தனைக்குள்ளும், நடைமுறைக்குள்ளும் தள்ளிச் சென்றது. அதன் தொடர்ச்சியில் இன்று புலிகள் மட்டும் போராடும் சக்தியாக அவர்களே ஏற்படுத்திய நிலையில், சில குழக்கள் துரோகம் இழைத்த பின்னர் பலர் உதிரிகளாகவும், சிறு குழுக்களாகவும் விரவிச் சிதறிச் சென்றனர்.

இவர்களுள் பலரும் பல்வேறு அனுபவவாத அடிப்படையில் பல்வேறுபட்ட முடிபுகளையும், போக்குகளையும் பிரதிபலித்தனர். இதில் புலிபற்றிய மதிப்பீட்டிலும், தேசியவிடுதலை பற்றிய மதிப்பீட்டிலும் உள்ள கோளாறை ஆராந்தறிவதே இக் கட்டுரையின் நோக்கம். இத் தவறான பல போக்குகளும் சந்திரிகா அரசு வந்த பின்னர் உக்கிரம் அடைந்ததும், புதிதாகப் பலர் தம் தம் கையாலாகத் தனத்துடன் சிதைவை நோக்கி நகர்ந்த வண்ணம் உள்ளனர். புலி ஆதரவாளர்கள் தவிர்ந்த புலிபற்றிய மதிப்பீடுகளின் வகைபிரிதலைப் பார்ப்போம் ஆயின்-

☯ புலி மக்கள் விரோத அமைப்பு. இதற்குப் பின் தேசியவிடுதலைப் போராட்டம் எதுவும் கிடையாது.
☯புலி பகுதியளவுக்கு மக்கள் விரோத இயக்கமாகும். இதற்குப் பின் தேசியவிடுதலைப் போராட்டம் பகுதியளவு உண்டு.
☯புலி மக்கள் விரோத இயக்கம். இதற்குப் பின் முழுமையாக தேசியவிடுதலைப் போராட்டம் உண்டு.

இவ்வாறு பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய புலிபற்றிய பல முடிபுகளுக்கு இவர்கள் வந்தடைகின்றனர். அதை அடைய இவர்கள் பல்வேறுபட்ட சொந்த அனுபவம், மற்றும் நண்பர்கள், உறவினர்கள் பாதிக்கப்பட்ட தன்மை, மக்கள் பாதிக்கப்பட்ட தன்மை என்று பலவற்றிலிருந்தே வந்தடைகின்றனர். இதிலிருந்து புலிகளை எதிர்கொள்ள,

☯எதிரியுடன் கூட்டுச்சேரத் தயாரானவர்கள்.
☯எதிரி புலிமீது தாக்கும் போது அதை மறைமுகமாக ஆதரித்தல்.
☯எதிரி புலிமீது தாக்கும் போது மௌனமாக இருந்து ஆதரித்தல்.
☯நேரடியாக எதிரியாகத் தெரியாத பல்வேறு ஏகாதிபத்திய பிரிவுகள் உடன் சேர்ந்திருத்தல் அல்லது ☯மறைமுகமாகச் செயற்படல்.
☯மௌனமாக இருத்தல் மூலம் மறைமுகமாக எதிரியை அங்கீகரித்தல்.
☯மக்களை பகுதியளவு சார்ந்திருக்க முயல்தல்.
☯மக்களை முழுமையாகச் சார்ந்திருத்தல்.

எனப் பல்வேறு போக்குகள் மூலம் புலியையும் தேசியவிடுதலைப் போராட்டத்தையும் பற்றி கருத்துகளைப் பிரதிபலிக்கின்றனர். இதிலிருந்து சில முடிபுகளை வந்தடைகின்றனர்.

☯தேசியவிடுதலைப் போராட்டம் புலிப்போராட்டமாக் கருதி தேசிய போராட்டத்தை எதிர்ப்பதாகக் கூறுதல்
☯தேசிவிடுதலைப் போராட்டம் சமன் புலிப்போராட்டம் எனக் கூறுவது.
☯தேசியவிடுதலைப் போராட்டமென எதுவுமில்லை எனக் கூறுவது.
☯புலிப் போராட்டம் அழிவுப் போராட்டம் எனக் கூறுவது.
☯சுயநிர்ணயம் எனக் கூறுவது புலியை ஆதரிப்பதற்குச் சமன் எனக் கூறுவது.
☯சுயநிர்ணயம் தேவையில்லை ஏதொ ஒரு தீர்வு வேண்டும். அது புலியை அழிக்கும். அதன் பின் போராடுவது.
☯தேசியவிடுதலைப் போராட்டம் புலிப்போராட்டமாக இன்று உள்ளது என்பது.
☯புலி அழிவது தேசிய சுயநிர்ணயத்தை அழிக்கும் என்பது.

எனப் பல்வேறு போக்குகள் பிரதிபலித்து பல்வேறு பிரிவுகளாக எங்கும் சிதறியுள்ளதுடன் பலத்த கருத்து முரண்பாடுகளையும், மோதல்களையும், நடைமுறைகளையும் கைக் கொள்ளுகின்றனர். இது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஓரளவில் பாதிக்கச் செய்வதுடன், முன்னேற்றத்தையும், பின்னடைவையும் அவரவர் போக்குக்கு இணங்கச் செயற்படுத்துகின்றது. நாம் சமூகம் மீது ஆழ்ந்த ஈடுபாடும், அம் மக்களின் விடுதலையின் மீது அக்கறை கொண்டும் இருக்கும் வரை எமது சொந்த மனப் பாதிப்புக்கள் மற்றும் விருப்பு வெறுப்புக்களில் இருந்தும் முடிபுகளை கண்டு அறிவதை ஒழித்துக் கட்டவேண்டும். நாம் எப்பொழுதும் மாக்சிய அடிப்படையில் இல்லாத பட்சத்தில் மக்களின் அடிப்படையில், எப்பொழுதும் அரசியலை முதன்மைப்படுத்தி அதிலிருந்து முடிபுகளுக்கு வரவேண்டும். ஆனால் துரஸ்டவசமாக பலரும் அரசியலை விட தமது விருப்பு வெறுப்புக்களை, தமது கடந்தகால துயரத்தில் இருந்து வருவது என்பது ஒரு ஈசற்பன அரசியல் போக்குள் இட்டுச் செல்கின்றது.

எம் நாட்டில் நடைபெறும் போராட்டம் என்பது என்ன? அதன் போக்கு என்ன? அதில் மக்களின் நிலையென்ன? அதன் விளைவுகள் என்ன? எனப் பலநூறு கேள்விகளை உள்ளடக்கிய இப் பிரச்சனையில் நாம் ஒரு சரியான நிலையை அடைய வெண்டுமெனில் மக்களின் நலன் எமது சொந்த விருப்பு வெறுப்புக்களை விட முதன்மையானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net

இலங்கையில் தேசிய இனமுரண்பாடே பிரதான முரண்பாடாக இன்றுள்ளது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அதற்குப் பின்னே வர்க்கப் போராட்டம் உள்ளது என்பதை, மற்றைய பல முரண்பாடுகளும் இதற்கு உட்பட்டே செயற்படுகிறது என்பதையும் நாம் எந்த முரண்பாடின்றியும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு முரண்பாட்டின் தன்மை அதன் செயற்தளம் பற்றியசரியான புரிதல் மிக அவசியமானது.எந்தப் பகுதி முரண்பாடும் பிரதான முரண்பாட்டுடன் தான் இணைந்து தீர்வை வந்தடைய முடியும். ஆனால் இப் பிரதான முரண்பாட்டுடன் 2,3 முரண்பாடுகள் இணைந்தும் முரண்பட்டும் செயற்படும் என்பதை, அதை எப்படிக் கையாள்வது என்பது எம்முன்னுள்ள சரியான அரசியல் பாதையைத் தெளிவாக்கும். நாம் பிரச்சனையின் அடிப்படையை ஆராயும் போது அதன் அனைத்தும் தழுவிய முழுமையை கவனத்தில் எடுக்கவேண்டும். மாவொ முரண்பாடுகள் பற்றிய புத்தகத்தில் கூறுவதை இங்கு முன்வைப்பது மேலும் சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும்.


"ஒரு பிரச்சனையை ஆராயும்போது, அகநிலைப்போக்கு: ஒருதலைப்பட்சப் போக்கு, மேலோட்டமான போக்கு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.
அகநிலைப் போக்கு என்னது பிரச்சினைகயைப் புறநிலையில் பார்க்கத் தவறுவதாகும்.
ஒருதலைப்பட்சப் போக்கு என்பது பிரச்சனைகளை முழுமையாகப் பார்க்கத் தவறுவதாகும்.
மேலாட்டமான போக்கு என்பது முரண்பாட்டின் முழுமையான பண்புகளையோ, அல்லது முரண்பாட்டின் ஒவ்வொரு கூறுக்குரிய பண்புகளையோ ஆராயத்தவறுவதாகும். ஒரு பொருளை ஆழமாகத் துரவிப் பார்த்து அதிலுள்ள முரண்பாட்டின் தன்மைகளை நுனுக்கமாக ஆராயும் தேவையை மறுப்பதும், இதற்கு மாறாக அதைத் தொலைவிலிருந்து நோக்கி, முரண்பாட்டின் மேலோட்டமான தோற்றத்தை ஒரளவு பார்த்துவிட்டு அதற்கு உடனடியானத் தீர்வுகான முயல்வதாகும்."

என அழகாகவே எம்மவர்களின் வரட்டுத்தனத்தை தோலுரித்துக் காட்டியுள்ளார். தேசியவிடுதலைப் போராட்டம் நடக்கும் மண்ணில் இருந்து அந்நியப்பட்ட நிலையில், மக்களின் துன்ப துயரத்தில் இருந்து பிரச்சனையைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் நின்றபடி, கற்பனையான தமது அகவிருப்பத்தின் சொந்த முடிபுகளை மொத்த மக்கள் மீது உள்ள முரண்பாடாகக் கான முயல்வது கானமுடிகிறது. இலங்கையில் தமிழ்பேசும் மக்களுக்கு இன்றைய பிரதான எதிரி சிங்கள இனவாத அரசு என்பதை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதேநேரம் புலிகள் தமிழ்பேசும் மக்களின் இரண்டாது எதிரியாகவுள்ளனர். இவ் இரண்டு எதிரிகளைச் சமப்படுத்துவதோ, அல்லது புலியை முதலாவது எதிரியாகக் கானமுயலும் போக்கும் என்பது சொந்த அகவிருப்பம் சார்ந்த முழுமையைப் புரியாத குருட்டுத்தனமாகும். இதை மாவோ

"எந்த ஒரு வளர்ச்சிப் போக்கிலும் ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் இருக்குமேயானால், அவற்றின் ஒருதலைமைப் பங்கை நிர்ணயம் செய்யும் பங்கை நிர்ணயம் செய்யும் பங்கை வகிக்கும் முதன்மை முரண்பாடாகவே இருக்கும்.

ஒரு முரண்பாட்டின் இந்த திட்டவட்டமான பருண்மையான கூறுகளின்: ஒரு முரண்பாட்டின் வளர்ச்சிப்போக்கிலுள்ள அதன் முதன்மைக்கூறு, மற்றும் முதன்மையற்ற கூறின் மாற்றங்கள் தான்: பழைய பண்புகளை விலக்குவதில், புதிய பண்புகளுக்கான சக்தியை உருவாக்குகின்றன. ஒரு புரட்சிகர அரசியற் கட்சியானது அரசியல் விவகாரம், இராணுவ விவகாரம் இரண்டிலும் தன்னுடைய போர்த்தந்திரம் மற்றும் செயல்தந்திரக் கொள்கைகளைச் சரியாகத் தீர்மானிப்பதற்குப் பயன்படக்கூடிய ஒரு முக்கிய வழிமுறையாக அமைவது எது? முரண்பாடுகளில் உள்ள சமமற்ற, ஏற்றத்தாழ்வான நிலைகளைப் பற்றியும், முதன்மை முரண்பாடு மற்றும் முதன்மையற்ற முரண்பாட்டைப் பற்றியும் ஒரு முரண்பாட்டின் முதன்மைக்கூறையும் முதன்மையற்ற கூறையும் பற்றிய ஆய்வே அவைகளைத் தீர்மானிப்பதற்குரிய வழிமுறையாகும். "

எம்மத்தியில் சுயநிர்ணயத்தை கைவிடுபவர்களும், மற்றும் தேசியவிடுதலைப் போரை ஆங்கீகரிக்க மறுப்பவர்களும் முதன்மை முரண்பாட்டின் இயல்பை மறுக்கின்றனர். இதில் முதன்மையல்லாத இரண்டாம் முரண்பாட்டை முன்தள்ளி முதன்மை முரண்பாட்டை மறுதலிக்கும் அல்லது கவனியாதது போல் காட்டமுயலும் போக்கு மொத்த மக்களின் முதன்மை முரண்பாட்டு உள்ள எதிர்ப்பை மறுதலிப்பதாகும். விடுதலை இயக்கங்கள் அரசுக்கு எதிரான முதன்மை முரண்பாட்டை மறந்து இயக்கத்துக்கு இடையிலான முரண்பாட்டை முதன்மைப்படுத்தி மோதியது என்பதும், பின்னால் அதை புலிகள் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் இன்றைய நிலையில் அதற்கு எந்தவிதத்திலும் குறையாத வகையில் பல உதிரிகளும் புலியை முதன் முரண்பாடாகக் காட்ட முனைகின்றனர். இது புலிகளின் வழியில் செல்வதாகும்.



மக்கள் இலங்கை அரசை முதன் முரண்பாடாக அன்றாடம் வாழ்நிலையில் சந்திக்க, சிந்திக்கும் உதிரிகள் அதிலிருந்து விலகி, புலிகளை எதிர்கொண்டால் அன்றாடப் பிரச்சனையை பிரதான முரண்பாடாக இவர்கள் முன் நிற்பதால் அது பிரதான முரண்பாடாக மாறிவிடாது. எப்பொழுதும் எத்தளத்திலிருந்தும் மக்களின் முரண்பாடு எதுவோ அதுவே எமது பிரதான முரண்பாடாக இருக்கவேண்டும். இதை லெனின் வார்த்தையில் பார்போமானால்:

"ஒரு பொருளை உண்மையாக அறியவேண்டுமானால்: நாம் அப் பொருளின் அனைத்துப் பகுதியையும், எல்லாத் தொடர்புகளையும் 'இடைத் தொடர்பு'களையும் தழுவிய வகையில் ஆராயவேண்டும். இதை நாம் ஒருபோதும் முழுமையாக சாதிக்க இயாது. ஆனால் எல்லாப் பகுதியையும் ஆராயவேண்டும் என்ற

www.tamilarangam.net

கோரிக்கை, தவறுகளுக்கு எதிரான: வளைந்து கொடுக்காத இறுகியதன்மைக்கு எதிரான பாதுகாப்பு வழங்குகிறது.

நாம் இலங்கையின் நிலையை முழுமையாக ஆராயவேண்டும். அதில் இருந்து பிரச்சனைகளை ஆராயவேண்டும். முரண்பாட்டை மறுப்பது என்பது மாவோ சுட்டுவதைப்போல் முரண்பாட்டை மறப்பது என்பது அனைத்தையும் மறுப்பது ஆகும். இது எல்லாக் காலத்துக்கும், எல்லா நாட்டுக்குரிய, விதிவிலக்கற்ற பொதுமை தழுவிய உண்மையாகும்.

எம்மவர்கள் இலங்கையில் தேசிய இனமுரண்பாட்டை விட வர்க்க முரண்பாடே பிரதான முரண்பாடு கூறுவது அதிலிருந்து அனைத்தும் தழுவிய உண்மையை மறுப்பதும் நிகழ்கின்றது, பிரதான எதிரியை மறுப்பதும் இரண்டாவது எதிரியை பிரதான எதிரியாகக் காட்டுவதும் இன்னும் ஒரு பொது உண்மையை மறுப்பதாகும். இதிலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தை மறுப்பதும், பெரும் தேசிய இனவெறித்தனத்தை மறுப்பதும் நிகழ்கின்றது.



இது சொந்த மக்களில் இருந்து அன்னியப்படும் போக்கு மட்டுமன்றி பொரும் தேசிய இனவெறிக்கு துணைபோவதும், சிங்க பாசிச அரசின் படுகொலைகளை மறுப்பதும் ஆகும். புலிகளின் மக்கள் விரோதத் தனத்ததை முதன்மையாக்குவதும், சிங்கள இனவெறி அரசின் இனவெறித்தாக்குதல், அதாவத சொந்த மக்கள் மீதான தாக்குதலை இரண்டாம் பட்சமாக்கி அதன் முதன்மைப்பாத்திரத்தை மறுப்பது மக்கள் விரோத நடவடிக்கையாக பரிணாமிக்கிறது.

இரண்டும் சமநிலைப்படுத்த முடியாது. பண்புரீதியில் பல அம்சங்கள் பொதுவாக இருந்தாலும் கூட, அரசு முதன்மைப் பாத்திரத்தை மறுதலிக்க முனைவது, சமநிலைப்படுத்துவதும் மக்களிலிருந்து அன்னியப்படுத்தும் நடவடிக்கை மட்டுமன்றி, சரியன மாாக்கத்தை எடுக்காது துரோகத்துக்கு இட்டுச்செல்வதாகும். புலிகளின் அரசியலிருந்து புலிகளின் மக்கள் விரோதத்தை புரிந்துகொள்ள முயலவேண்டும். அதிலிருந்து தேசிய விடுதலைப் போராட்தை மதிப்பிட வேண்டும். புலிகளின் அரசியல் மக்கள் விரோதம் மூலமே தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும். புலிகளின் அரசியலை புரியாத புலிகளின் மீதான விமர்சனம் அரசியலற்ற வெற்றுச் சூத்திரங்களாக, மனப்புலம்பல்களாக கெட்டுச் சீரழிந்து போகும்.

புலிக்கும் அரசியலுக்கும் இடையிலுள்ள மக்கள் விரோதத் தன்மையை ஆராயின் புலிகளின் நீதி, மாற்று கருத்துத்தளத்தில் மக்கள் விரோத்ததைக் கைகொள்ள, அரசு 'தமிழன்' என்பதற்காக எல்லாவித மக்கள் விரோதத்தையும் கைக்கொள்கிறான். இதில் மக்கள்விரோதத்துடன் கூடியது அரசேயாகும் என்பது மிகத் தெளிவான உண்மையாகும். தேசிய விடுதலைப் போராட்டமான முதன்மைப் போராட்டத்தை கையிலெடுக்காத எந்தப் போராட்டமும் இரண்டாவது முரண்பாடான வர்க்கப் போராட்டத்தைத் தீர்காது - மறுதலிக்கின்றது.

மறுதலையாக வர்க்கப் போராட்டத்தை முதன்மைப் போராட்டமாக எடுக்கும் எப்போராட்டமும் தேசிய முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும் வரை ஓர் அடியைத்தன்னும் முன்னெடுக்கமுடியாது. பெ ரும் தேசிய இனத்தில் பிரிவினைக்கு ஆதரவான கோசம் வெளிப்படதவரை சிறுபான்மை இனத்தில் ஐக்கியம் என்ற கோசம் எழும்ப முடியாது என்ற வரலாற்று உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தை ஏற்காத ஐக்கிப் போராட்டம் வெறும் கற்பனையிலான கதைகளாகவே பரிணாமிக்கும். இன்று எம்மிடம் உள்ள தேவை சுயநிர்ணயத்தையும், அதன் அடிப்படையிலான தேசியவிடுதலைப் போரை உயர்த்திப் பிடிப்பதுமாகும். அதிலிருந்து பிரதான எதிரி அரசை எதிர்த்தும், இரண்டாவது எதிரியை நோக்கி அதன் அரசியலை விமர்சித்து மற்றும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட எதிர்ப்பை வெளிக் கொண்டு வருவதுமே என்பது இன்றைய வரலாற்றுக் கடமை. அதே நேரம் பிரதான முரண்பாடான தேசிய விடுதலையை உயர்த்தியும், இரண்டாவது போராட்டமான வர்க்கப் போராட்டத்தை அதனுடன் இணைத்தும் முன்னெடுப்பது எமது இன்றைய வரலாற்றுக் கடமை. இதை மறுக்கும் அனைத்துப் போக்குகளும் திசைமாறிய பிரதான எதிரியுடன் சமரசத்துக்கு இட்டுச்செல்லும் ஏதொ ஒரு வழியாக சீரழிந்து குட்டிச்சுவராகும் போக்குகளாகும். இவற்றிலிருந்து மீள்வதற்குரிய இன்றைய தேவை நிதானமான விமர்சனத்துடன் கூடிய மீள் ஆய்வாகும் ●

www.tamilarangam.net

## முன் பக்கத் தொடர்..

சந்திரிக்கா மிக சிறந்த ஏமாற்றுக்காரியாக மாறியதுடன் மட்டுமின்றி, சிங்கள இன்வாதத்தை பேனும் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்த பின்பு அதையே வெட்டிக் குறுக்கும் பணியில் ஈடுபட்டபடி, இத் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்த முடியாததிற்கு தமிழ் துரோகக் குழுக்களே காரணம் என ஓர் அப்பட்டமான பொய்யையே கூறி அதையே உண்மையாகக் காட்ட முடிந்தது என்றால் இந்த மோசக்காரியை நாம் புரிந்துகொள்ள வேறுஎதுவுமே தேவையில்லை.

இந்த மோசக்காரியின் ஏமாற்று மாயையில் புலிகள் மட்டுமல்ல அரைகுறை முற்போக்கு வேடமிட்டிருந்த பல புத்திஜீவிகளும் தமது அற்ப பிழைப்புக்காக சந்திரிக்காவின் கால்களை நக்கி இன்று பிழைக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 10 வருடங்கள் தமிழ் மக்களின் பிடியில் இருந்த ஒரு பகுதி சொந்தமண்ணை இனவெறி சந்திரிகா அரசு கைப்பற்றியுள்ளது. இந்நிலை ஏற்பட்டமைக்கான முழுப்பொறுப்பும் புலிகளையே சாரும். எதிரி யார்? நண்பன் யார்? என்பதை எந்த வரையறையின்றி தம்மை தமது கருத்துக்கு விசுவாசம் இல்லாதவர்களையும் ஒழித்துக்கட்டியதுடன், தமது சொந்த இயக்கத்திலும் அதை விட்டுவைக்கவில்லை. எப்போது துதிபாடிகளைக் கொண்ட ஒரு கூட்டமே போராட்டத்தை மதிப்பிடவும், வாழ்துப்பாடவும் இருந்தது என்பது போராட்டத்தில் பிழைகளைக் கூட இனம் காண முடியாத ஒரு நிலைமையை அடைந்தது.

(உ- ம்) யாழ் குடாநாட்டை கைப்பற்ற என இனவெறியரசு முன்னெடுத்த முதல் நடவடிக்கையின் போது மக்களை வெளியேற்றியபடி புலிகளால் முதல் வேண்டுகோள் விடப்பட்டது. இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து புலிகள் தமது தவறை உணர்ந்து அதைத் தடுக்க ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து மக்களை நிறுத்த முனைந்தனர். ஆனால் ஊரடங்கு முடிந்தவுடன் மக்கள் கட்டுப்பாட்டையே மீறி ஓடத்தொடங்கினர். முதலில் பீதியை விதைத்த நிகழ்வின் பின்னர் அவர்களையே கட்டுப்படுத்த முடியாது போனது.



இந்நிகழ்வின் பின் உள்நாட்டு, வெளிநாட்டு புலிகளின் செய்தி ஊடகங்கள் தலைவர் கேட்டதற்கு இணங்கியே மக்கள் வெளியேறினர் எனப் பிரகடனம் செய்தனர். அதை வெற்றியென்றனர். ஆனால் உண்மையில் மக்கள் புலிகளின் இரண்டவாது வேண்டுகோளை ஏற்று நின்று இருந்தபின் அதுமட்டுமே வெற்றியாக இருந்திருக்கும். அதுமட்டுமே போராட்டத்தை வழிநடத்தும் வழியாக இருந்திருக்கும். மற்றைய வழி தப்பியோடும் வழியாக மக்களை மட்டுமின்றி புலிகளின் உறுப்பினர்களைக் கூட இட்டே சென்றது.

இன்றைய நிலைமை ஏற்பட்டமைக்கு முழுக்க முழுக்க புலிகள்தான் பொறுப்பாகும். சிங்கள இனவெறியரசு ஆக்கிரமித்தது எனக் கூறுவதும் தமது தவற்றை மூடிமறைக்கும் கைங்கரியமாகும். புலிகளின் வங்குரோத்து அரசியலின் தோல்வி நியாயப்படுத்த முடியாதவகையில், போராட்டத்தை சிதைத்து நொருக்கியுள்ளது. புலிகள் - சந்திரிகா அரசு பேச்சுவார்த்தை தொடங்குமுன்பே சந்திரிகா பற்றி ஒரு மாயையை மக்கள் முன் புலிகளின் வெளியீடுகள் எடுத்துச் சென்றது. சந்திரிகா அரசு தமிழ்மக்களின் காவலராக இட்டுக்காட்டுவதில் புலிகளின் பங்கு மிக முக்கியமானதாகும். இதன் தொடர்ச்சியில் எழுந்த பேச்சுவார்த்தையில் சந்திரிகா அரசை மதிப்பிடுவதில் தவறிழைத்தனர். சந்திரிகா அற்ப தீர்வை முன்வைத்து தம்மை நடுரோட்டில் அரசியல் அநாதைகள் ஆக்கிவிடுவார் எனப் பயந்த புலிகள், தாம் சந்திரிகா பற்றி முன்வைத்த பழைய கருத்தில் நம்பிக்கை கொண்டு இராணுவக் கோரிக்கையடங்கிய சில தீர்வுகளை முன்வைத்தனர்.


இது சந்திரிகா அரசுக்குக் கிடைத்த முதல் வெற்றியாக அமைந்தது. தன்னுடைய இனவாத மேலாதிக்க நிலையைப் பாதுகாக்க, அம்பலப்படாத வகையில் தன்னை தகவமைத்துக்கொள்ள புலிகள் ஒரு அழகான பரிசை வெள்ளித்தட்டில் வைத்து வழங்கினர். சர்வதேச ரீதியாக புலிகளின் கோரிக்கை தேசியத்தை உயர்த்தி பிரச்சாரம் செய்ய முடியாதவகையில், சொந்த நலன் சார்ந்தவகையில் மக்களின் பெயரால் கோரிக்கையாக வெளிவந்தன. இது ஓர் இராணுவக் கோரிக்கையாக, மக்களைச்சார்ந்து இருக்காதவகையில் சர்வதேச ரீதியில், சில அரசு, இராணுவம் விவாதிக்கும் விவகாரமாக மாறியது என்பது தேசிய இனக்கோரிக்கையை மூடிமறைக்கும் அளவுக்கு இட்டுச்சென்றது.

உண்மையில் சந்திரிகா அரசு ஓர் இனவாத அடிப்படையைக் கொண்டது என்பதைப் புரிந்து கொண்டு, தமிழ்மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை தரும்படி கோரியிருக்க வேண்டும். இதன் அடிப்படையில் சந்திரிககா அரசு ஒரு அற்ப தீர்வையும் முன்வைக்க முடியாது திணறி, அரசுக்குள் உள்ளார்ந்த முரண்பாடு வளர்ந்தும், சிங்களப் பகுதியில் இருந்த சுயநிர்ணய ஆதரவு சக்திகளை தேசியத்தின் பக்கத்திற்கு வென்றெடுத்திருக்க முடியும். இதுநடந்திருப்பின் சந்திரிகா அரசு ஆட்டங்கண்டு பலவீனமடைந்து, யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது சாத்தியமற்றதாக்கியிருக்கும். அத்துடன் சர்வதே ஆதரவை மொத்தமாக தேசிய போராட்டத்தின் மீதும் திருப்பியிருக்க முடியும்.

ஆனால் நடந்ததோ எதிர்நிலையாகவும், தொடர்ச்சி சில சிங்களக்கிராம அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதும், இராணுவ இலக்கற்ற மக்கள் பிரதேசத்தில் நடந்த தூண்டுத் தாக்குதல்கள் புலிகளை

www.tamilarangam.net

ஒரு மக்கள்விரோத பயங்கரவாத இயக்கமாக சந்திரிக்கா அரசு சர்வதேசம் எங்கும் பிரச்சாரப்படுத்தி அதில் வெற்றிபெற்று வருவது காணமுடிகிறது. இதைத்தொடர்ந்தே கனடா, . புலி உறுப்பினர்கள் மீது கைதுகள் நடப்பதையும், அவர்களின் சில மக்கள் விரோத நடவடிக்கைகளை இவ்வரசுகள் பயன்படுத்துவதையும் காணமுடிகிறது.



இந்நியையில் யாழ்குடாநாடு இராணுவத்தால் கைப்பற்றிய பின்பு புலிகள் மீளவும் தமது தவறான ஒரு புதிய கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அதாவது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து இராணுவம் வெளியேறினால் மட்டுமே பேச்சுவார்த்தை என அறிவித்துள்ளனர். இவ் அறிவித்தல் போராடுபவர்களையும், அவர்களின் ஆதரவாளர்களையும் தற்காலிகமாக உற்சாகப்படுத்தலாம். ஆனால் இது தேசியவிடுதலைப் போராட்டத்தை மேலும் சிதைக்கவுள்ளது. ஏனெனில் எமது போராட்டம் மக்கள் போராட்டமாக இன்றி இளைஞர்களைக் கொண்ட ஒரு புலிப்போராட்டமாக உள்ள நிலையில், ஒரு இராணுவக் கோரிக்கையாக இதுவுள்ளது. ஒரு யுத்தத்தின் மூலம் பிடித்த பிரதேசத்தை விட்டு வெளியேறிய பின் மட்டுமே பேச்சுவார்த்தை என்பது புலிகளை மேலும் அம்பலப்படுத்த அரசுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாக மாறும்.

யுத்தத்தை நடத்துவது அரசும், ஏகாதிபத்தியங்களுமே; இக்கோரிக்கையை அரசு, ஏகாதிபத்தியங்களும் புலிகளை பயங்கரவாத இயக்கமாப் பிரகடனம் செய்யவும், புலிகள் அரசியல் தீர்வுக்குத் தயாரில்லை எனக் காட்டவும் இக்கோரிக்கை எவ்வளவு நியாயமாக இருந்தாலும் இட்டுச்செல்லும். மீண்டும் சந்திரிக்கா அரசு ஓர் இனவாத அரசு என்பதைப் புரிந்துகொண்டு அரசியல் தீர்வை கோரவேண்டும். அதுவும் 1985 திம்பு பேச்சுக் கோரிக்கையை அடிப்படையாக முன்தள்ள வேண்டும். திம்பக் கோரிக்கைக்குக் குறைந்தது எதையும் ஆராயத் தயாரில்லை என்பதை பிரகடனம் செய்யவேண்டும். 10 வருடங்களுக்கு முந்திய சரியான கோரிக்கை முன்தள்ளினாலும் அதன்மூலம் இக்கோரிக்கையில் அன்று உடன்பட்டிருந்த இன்றைய துரோகக் குழுக்களையும் வாய் மூடவைக்கும், அல்லது இணைந்து கோரவைக்கும் ஒரு சரியான ராஜதந்திர வழியுடன் அரசியல் தேவை. இது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீது, அதன் இன அடையங்களை குறைந்த பட்சம் பேணவும் உள்ள ஒரே தீர்வாகும். இல்லாதவரை தேசியப் போராட்டம் சீரழியவும், பின்தங்கிச் செல்லும். திம்புக்கோரிக்கையை முன்வைத்து அதைத் தரும்படிகோரி அரசையும், உலகத்தையம் நிர்ப்பந்திக்கவேண்டும். அந்நவகையில் திம்புக்கோரிக்கை:-

1. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமென அங்கீகரித்தல்.
2. இலங்கைத் தமிழருக்கு இன்னதெனக் கூறக்கூடிய தாயகம் உண்டு என்பதை அங்கீகரித்தல்.
3. தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
4. இலங்கையைத் தம் நாடாகக் கொண்ட எல்லாத் தமிழர்களது பிரஜாவுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்.

இக்கோரிக்கை சாதாரணமாக ஓர் இனத்தின் ஜனநாயகக் கோரிக்கையாகும். இதைக் கோருவது சர்வதேசிய ரீதியாக போராட்டத்திற்கு பலத்தை சேர்ப்பது மட்டுமன்றி இதை வழங்க மறுக்கும் அரசை அம்பலப்படுத்தும். இதை அடிப்படையாகக் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் ஒருபடி உயர்த்த முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். ○

## பிரஞ்சு ஏகாதிபத்தியம் போராட்டங்களை அடக்கி ஒடுக்க தயார் என அறிவிப்பு!

இந்தோனேசியாவில் நடைபெற்று வரும் கிழக்குத் தீமோர் போராட்டத்தை அடக்கி ஒடுக்கத் தேவையான அனைத்து உதிவிகளையும் செய்யத் தயாரென பிரஞ்சு வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது. ஆம், இந்தோனேசியாவின் சந்தையை பிரஞ்சு ஏகாதிபத்தியம் கொள்ளையிட திறந்து விட்டிருக்கும் வரை, அதைப் பாதுகாக்க பிரஞ்சு தேவையான உதவிகள் அனைத்தையும் வளங்கத் தயாராகி வருகிறது. இது நாளை இலங்கையிலும் நடக்கலாம். பிரஞ்சு - இலங்கை உறவு அதிகரித்து வரும் இந்நிலையில் நாளை தமிழீழ போராட்டத்தை அடக்கி ஒடுக்க கிழக்குத் தீமோர் வழியில் எமக்கு ஓர் எச்சரிக்கையாகும்.

www.tamilarangam.net



# போர்க்குணம் கொண்ட பிரஞ்சு தொழிலாளியும் பிரஞ்சு மக்களின் மொத்த சமூக அமைப்பும்

கடந்து சென்ற நவம்பர் மார்கழி மாதம் பிரான்சின் வரலாற்றில் மீண்டும் ஒரு முறை பாட்டாளி வர்க்கம் தனது போர்க்குணாம்சத்தை உலகுக்குப் பறை சாற்றியது. பிரஞ்சு மக்களின் போர்க்குணாம்சத்துடன் கூடிய போராடும் தன்மை மட்டுமின்றி, வரலாற்றை மாற்றும் தகமையை தன்னகத்தே கொண்டுள்ளதை இனம் காட்டினர். வரலாறு தோறும் பல நீண்ட போரராட்டங்கள் தொழிலாளிவர்க்கம் போராடிப்பெற்ற உரிமைகளை படிப்படியாகப் பறித்து வரும் இன்றைய ஆளும் வர்க்கத்துக்கு எதிராக தொழலாளர்கள் தன்னிச்சையாக கொதித்து கிளர்ந்து எழுந்தனர். இதில் தலையீட்டை நடத்திய தொழிற்சங்கங்கள் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க கட்சிகள் பாராமுகமாக இருக்க போராட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது. இருந்தபோதும் போராட்டத்தீ இன்னமும் பெருந்தீயாக மாறும் நிலையில் புகைத்த வண்ணமே உள்ளது. பிரஞ்சு மக்களின் இன்றைய சமூக வாழ்வியலில் அவர்கள் நிலையை இன்றைய போராட்டத்தை ஒட்டி மேலும் ஆராய இக்கட்டுரை முயல்கின்றது. 5 கோடி 70 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட பிரஞ்சு சமூகத்தில் 15 வயதுக்குக் குறைந்தோர் 1 கோடி 20 இலட்சம்

www.tamilarangam.net

பேராவர். மிகுதியாக உள்ளோரில் வேலை செய்யும் தகமை உள்ளோர் 2 கோடி 45 இலட்சத்து இருபது ஆயிரம் பேராவர். வேலை செய்யாதோரில் 2 கோடி 4 இலட்சத்து 20 ஆயிரம் பேராவர். பிரான்சின் மொத்தக்கடன் 35,20,000 கோடி இலங்கை நாணயமாகும் ஒவ்வோர் பிரன்சுக்காரனின் மீதுமுள்ள கடன்சுமை 6 இலட்சம் ருபாவாகும். அத்துடன் 1996 இல் வட்டியாக கொடுக்க உள்ள பணம் 2,48,600 கோடியாகும். இது பிரஞ்சு வரவுசெலவில் 8.2 வீதமாகும். இக்கடன் 1989 தைவிட இன்னும் இருமடங்காகி உள்ளது. பிரஞ்சு சமூகம் மொத்தத்தில் 2,45,80000 பேர் உழைப்பைச் சார்ந்த வகையில் தன்னகத்தே ஒருங்கமைந்து உள்ளது. இந்த வேலைசெய்யும் பிரிவுகள் எப்படி வேலைப்பிரிவினையைக் கொண்டுள்ளது எனப்பார்ப்போம்.

**வேலைசெய்வோர் - 2,45,80,000 பேர்.**

| | | |
|---|---|---|
| விவசாயம் | 12,29,000 | 5 வீதம் |
| சிறு உற்பத்தி, கடைஉரிமையாளர், முதலாளிகள், பெரும் அதிகாரிகள் | 12,78,160 | 5.2 |
| அறிவுத்துறை சார்ந்த தொழில்(ஆசிரியர்கள், .........) | 28,26,700 | 11.5 |
| தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையில் உள்ளோர் | 49,16,000 | 20.0 |
| அலுவலக உத்தியோகத்தர் | 64,64,540 | 26.3 |
| தொழிலாளி | 69,31,560 | 28.2 |
| இராணுவம், பொலிஸ் | 2,70,380 | 1.1 |
| வேலைசெய்யாதோர் - | 2,04,20,000 பேர் | |
| ஓய்வு பெற்றோர் | 1,14,00,000 | 20.0 |
| மாணவர்கள் | 67,26,000 | 11.8 |
| மற்றவை | 78,09,000 | 13.7 |

இந்த வகையில் வேலை செய்யும் பிரிவுகளில் தொழிலாளர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், அறிவுசார்ந்த பிரிவுக்கும் இடையில் அதிக வேறுபாடு இல்லை. இங்கு தொழிலாளர் உடல் உழைப்பை விற்கும் அதேநேரம் அலுவலக மற்றும் அறிவுசார்ந்த ஊழியர்கள் மூளை உழைப்பை விற்கின்றனர். மூவருக்கும் இடையில் சம்பள வேறுபாடு கிடையாது. மாறாக இருபகுதியும் மாதக்கூலிலைச் சார்ந்து உள்ளனர். இதைவிடுத்து சொந்த சொத்துக்களை பொறுத்தவரையில் ஒருபகுதியினரிடம் வீடுகள் உண்டு. மற்றப்படி சொத்துக்கள் என்று எதுவும் கிடையாது. ஆனால் பாவனைத் தேவைவ்யை ஒட்டி, பிரஞ்சு சமூகத்தின் வளர்ச்சியுடன் ஒட்டிய சொத்துக்கள் மட்டுமே உண்டு. பரம்பரைக்கு கடத்தும் வகையில் சொத்துக்களை கொண்டிருப்பது பெருமளவு இல்லை. இந்தப்பிரிவு மொத்தமாக உழைக்கும் பிரிவில் 65.8 வீதமாகும். இம்மூன்று பிரிவுக்கும் சற்றுமேல் உள்ள பூர்சுவா வர்க்கப்பிரிவாக உள்ள 20 வீதமானோரில் ஒருபகுதியினர் தொழிலாளியின் நிலையிலும், மற்றவர்கள் உயர்ந்த நிலையிலும் உள்ளனர். மொத்தத்தில் 75.8 வீதப்பிரிவினரில் ஒரு பகுதியினர் நீண்ட கடன் வீடுகளை அல்லது சொந்த வீடுகளைக் தமதாகக்கொண்டுள்ளனர். இதைத்தவிர எந்தச் சொத்தும் பெரிதாகக்கிடையாது. சிறு சேமிப்புக்கள், வீட்டுப்பொருட்கள் மட்டுமே அவர்கள் சொத்தாக உள்ளது. ஒரு மாதம் சம்பளம் இல்லாமல் போயின் இவர்கள் தவிர்க்கமுடியாது வீதிக்கு வருவதைத் தவிர வேறு வழி கிடையாது. இந்த நிலைமை இந்த தொழில் சார்ந்த பிரிவுகளுக்கு இடையில் வர்க்கவேறுபாடு தகர்ந்து வருகின்றது. உடல், மூளை உழைப்பு சார்ந்த தொழில் வேறுபாடுகள் உள்ளனவே ஒழிய வாழ்நிலையைப் பொறுத்தவரையில் அதிக ஏற்றத்தாழ்வு கிடையாது.

மற்றும் விவசாயத்தில் ஈடுபடும் 5 வீதமான மக்களில் பெரும் விவசாயிகள் முதல் சிறுவிவசாயிகள் வரை காணப்படுகின்றனர். இவர்கள் நிலத்தை சொந்தமாகக் கொண்டுள்ளதுடன் வீடுகளையும் சொந்தமாகக் கொண்டுள்ளனர். மற்றும் கால்நடைகள், இயந்திர உபகரணங்கள் எனக்கொண்டுள்ள இவர்கள் பெரும் பண்ணைகளை நடத்துகின்றனர். இந்த 5 வீதத்துக்குள் தான் அவ்விவசாய நிலத்தில் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர் நிலையிலுள்ள பிரிவினரும் உள்ளடங்கி உள்ளனர்.

மற்றும் 5.2 வீத உடைமையாளர்கள் சிறுகடை முதல் பெரிய கடைகள் வரை தமது சொத்தாகக் கொண்டுள்ளனர். மற்றும் பொலிஸ் இராணுவம் என 1.1 வீதமுள்ளவர்கள் சொத்து எதுவும் அற்ற சில சிறப்பு சலுகைகளைப்பெற்றவர்கள். இவர்கள் சம்பளம் தொழிலாளியின் ஆகக்குறைந்த சம்பளத்தை விட 2 மடங்கு அதிகம் இல்லை. பிரஞ்சு சமூகத்தில் 15 வீத மானோர் தான் சொத்துடைமைகளை (வீடு தவிர்ந்த ) கொண்ட ஒரு பிரிவாக உள்ளனர். இதில் கூட பாரிய ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது.

இன்று நவீன விஞ்ஞான வளர்ச்சியுடன் உலகைச் சூறையாடும் திட்டங்கள் ஊடாக யாரை உருவாக்குகின்றது என ஆராய்வோமாயின்

www.tamilarangam.net

| | |
|---|---|
| வேலை இல்லாமல் பண்ணுவது | 23.2 வீதம். |
| தொழிலாளி, உத்தியோகத்தர் | 32.3 வீதம் |
| சுயேட்சையான வேலை | 2.7 வீதம் |
| படிப்பவர்களும் வேலைபழகுவோரும் | 3.2 வீதம் |
| வேலைசெய்யாமல் சும்மா இருக்கும் வேலை | 9 வீதம் |
| உரிமையாளர்கள் | 9.8 வீதம் |
| அறிவுரீதியான உத்தியோகத்தர் | 14.2 வீதம் |
| மற்றவை | 5.6 வீதம் |

இந்த வகையில் வேலையில்லாத்திண்டாட்டத்தை நவீன விஞ்ஞானத்துடன் கூடிய அதிகளவு சுரண்டல் 23.2 வீதமானோருக்கு வேலையில்லாமல் செய்கின்றது. அதே நேரம் 32.3 வீதம் அடிமட்ட உழைக்கும் பிரிவை உருவாக்குகின்றது. சொத்து உரிமையாளரை 9.8 வீதமாக உருவாக்கும் இந்த சுரண்டல் சமூகம் 9 வீதமானோரை சும்மா இருந்து சுகபோக வாழ்வை அடையும் பிரிவை உருவாக்குகின்றது.

வேலையில்லாமல் போனோரும், அதிகுறைந்த உதவித்தொகை பெறுவோரும்

| ஆண்டு | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|
| அதிகுறைந்த அரச உதவி பெறுவோர் | 5,10,100 | 5,82,400 | 6,71,200 | 7,92,900 | – |
| வேலையில்லாதோர் | 25 இலட்சம் | 27 இலட்சம் | 29,1 இலட்சம் | 31,7 இலட்சம் | 33,5 இலட்சம் |
| இவர்களுக்கென பாவித்த பணம் | 6,50,900 கோடி | 6,76,400 கோடி | 6,99,900 கோடி | 7,08,900 கோடி | |

அதிகுறைந்த உதவிபெறுவோர் தொகையும், வேலையில்லாத்திண்டாட்டமும் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. இது 1996 இலும் அதிகரித்துச் செல்கின்றது என்பது கவனிக்கத்தக்கது.

புதிதாக உருவான வேலைவாய்ப்புக்கள் பிரஞ்சு சமூக நெருக்கடியுடன், அதிகூடிய சுரண்டல் முயற்சியின் ஊடாக பெண்கள் வேலையை இழந்து வருகின்றனர். அதைக்கீழுள்ள புள்ளிவிபரங்கள் இனம் காட்டுகின்றது.

| புதிதாக உருவாகும் வேலைகளில் | | |
|---|---|---|
| | புதிதாக வேலை செய்வோர் | மொத்த வேலை செய்வோர் |
| ஆண் | 72 வீதம் | 57 வீதம் |
| பெண் | 28 வீதம் | 43 வீதம் |

நவீன சுரண்டலுடன் ஏற்படும் சமூக நெருக்கடி ஊடாக புதிதாக வேலை சேர்க்கும் போது பெண்கள ஒதுக்கப்படுவதன் மூலம், பெண்கள் பொருளாதாரரீதியில் சுயபலம் பெற்று இருந்த தன்மை இழக்கப்படுகின்றது. இதை அண்மைய குழந்தை பிறப்பு வீதம் கோடிட்டுக் காட்டுகின்றது.

| ஆண்டு | 1970 | 1976 | 1981 | 1987 | 1994 | 1995 |
|---|---|---|---|---|---|---|
| குழந்தை பிறந்த ஆகக்குறைந்த சராசரி வயது | 27,2 | 26,7 | 27,1 | 27,9 | 28,7 | 28,8 |
| குழந்தைகள் | 8,47,783 | 7,20,395 | 8,05,483 | 7,20,00 | 7,10,500 | 7,29,00 |

ஒவ்வொரு பெண்ணுக்கும் 1990 இல் 1.8 குழந்தை பிறப்பு சராசரியாக இருந்தது. இது 1994 இல் 1.7 ஆகவும், 1995 இல் 2.5 ஆகவும் திடீரென அதிகரித்துள்ளது. இது 36 வீதம் அதிகரிப்பை 1994 ஐ விடக் கொண்டுள்ளது. கடந்த 10 வருடத்தில் 10 வீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. அதாவது பெண்களின் வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டு பெண்கள் வீடுகளில் முடக்கப்பட்டு, ஆணின் உழைப்பைச்சார்ந்து பெண் ஆணின் அடிமையாக குழந்தை பெறும் இயந்திரமாக மாற்றப்படுவதை புள்ளிவிபரம் காட்டுகின்றது. இதே நிலை 1970 நெருக்கடியின் போது இருந்துள்ளதை புள்ளிவிபரம் மேலும் காட்டுகின்றது.

இதே நேரம் விவாகரத்து அதிகரித்துச் செல்வதை கீழ் உள்ள அட்டவணை காட்டுகின்றது:

விவாகரத்து எண்ணிக்கை

| | |
|---|---|
| 1980 | 79,600 |
| 1986 | 1,06,700 |
| 1989 | 1,03,600 |
| 1993 | 1,09,200 |

விவாகரத்துக்கள் மிக இலகுவாக பிரான்சில் பெற்றுவிட முடியாது. குழந்தைகள் இருப்பின், ஒருவர் வேலைசெய்யாமலிருப்பின் விவாகரத்து என்பது ஒரு பாரிய சுமையாகவே எதிர் கொள்கின்றனர். ஏனெனில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உழைப்பவர் தொடர்ந்து மனைவிக்கும், குழந்தைக்கும் அல்லது கணவருக்கும் குழந்தைக்கும் பணம் கட்ட வேண்டும் என்பதில் விவாகரத்து எடுப்பதை தவிர்க்கின்றனர். அல்லது திருமணம் செய்யாமல் வாழ்தல் அதிகரித்துச் செல்கின்றது. இது குடும்பமாகவோ அல்லது தனித்தனியாகவோ சேர்ந்து இருத்தல் என்ற வகையில் சமூகம் தன்னளவில் இசைவாக்கம் அடைகின்றது. இது விவாகரத்து மீதுள்ள கடுமையான போக்கு, மற்றும் இவ்வரசு மக்கள் மீது சுமத்தும் பொருளாதாரச்சுமைகள், எனப் பல்வேறு நெருக்கடிகளை பிரஞ்சு மக்கள் எதிர்கொள்வதால் சமூகத்துக்கு இடையில் பாரிய பிளவுகளை ஏற்படுத்துகின்றது.

பிரஞ்சு சமூகத்தில் மக்களின் இணைந்துவாழும் தன்மை.



| வயது | 35க்கு குறைந்த | 35-39 | 40-44 | 45 கூட | 10க்கு குறைய | 10-15 | 15 கூட |
|---|---|---|---|---|---|---|---|
| ஒன்றாக வாழ்வது இல்லை ஆனால் துணை உண்டு | 34 வீதம் | 17 | 9 | 5 | 13 | 13 | 8 |
| சேர்ந்து வாழ்தல் | 15 | 16 | 12 | 5 | 18 | 18 | 2 |
| தனித்து வாழ்தல் | 51 | 67 | 79 | 90 | 69 | 78 | 90 |

பிரஞ்சு சமுதாயம் தனிமனித முதன்மைப்படுத்தலுடன் கூடிய பொருளாதார கனவுகளுடன் குடும்ப அலகு சிதறிய வண்ணம் உள்ளது. 10 வயதுக்கு மேற்பட்ட பிள்ளை கூட பெற்றாருடன் ஒட்டி வாழமுடியாத வகையில், பிரஞ்சு பெற்றாரின் பொருளாதார, முதன்மைப்படுத்தல் பிரித்து விடுகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் கூட குறைந்த வயதில் இருக்கும் பிணைப்பு வயது செல்லச் செல்ல பிரிவு அதிகரித்துச் செல்கின்றது. இங்கு ஆணாதிக்க பிளவுகளைவிட பொருளாதாரதனிநலன் முதன்மையான இடத்தைப்பிடிப்பதால் குடும்பங்கள் சிதறுவது மட்டுமன்றி தனித்தனியாக வாழ்வது அதிகரித்துச் செல்கின்றது. இவ்விடத்தில் பெண்களைப்பொறுத்தவரையில் வீட்டு வேலைகளில் பெண்களின் சுமை என்பது வீழ்ச்சி கண்டுள்ளது. அதைக்கீழுள்ள அட்டவணையில் பார்க்கமுடியும்.

பெண்களின் வீட்டு வேலைநேரம்

| வீதம் பேர் | நேரம் ஒரு கிழமைக்கு |
|---|---|
| 24.5 வீதம் | 1 தொடக்கம் 2 மணித்தியாலம் |
| 38.2 ,, | 3 ,, 5 ,, |
| 19.2 ,, | 6 ,, 9 ,, |
| 8.6 ,, | 10 ,, 19 ,, |
| 4.5 ,, | 20 ,, 29 ,, |
| 0.4 ,, | 30 ,, 39 ,, |

www.tamilarangam.net

இந்த வகையில் பெண் வீட்டுக்காக வீட்டுவேலைகளைச் செய்வது என்பது குறைந்துவிட்டது. 0.4 வீதமானோர் மட்டுமே 39 மணி நேரவேலையை அதாவது பிரஞ்சுத் தொழிலாளியின் வாரவேலைநேரத்தளவிற்கு வீட்டுவேலைகளில் ஈடுபடுகின்றனர். மற்றப்படி பிரஞ்சு சமூகத்தில் உருவான விஞ்ஞானவளர்ச்சி பெண்களை வீட்டுவேலைகளில் இருந்து விடுவித்து வருகின்றது. இதன் அர்த்தம் ஆணாதிக்கத்தில் இருந்து விடுவித்தது என்பதல்ல. இயந்திரசாதனங்களின் வளர்ச்சி வேலையை இலகுவாக்கியதுடன் மட்டுமன்றி ஆண்களும் கூட்டாக வீட்டுவேலையைச் செய்வது அதிகரித்து வந்துள்ளது. மற்றும் உணவைத்தயாரித்தல் இலகுவான வழிவகைகளை அடைந்ததும் , பல்வேறு விதத்தில் பலர் உணவை கடைகளில் உண்பதும் முக்கிய காரணங்களாகும்.

வேலையை ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒப்பிட்டுப்பார்ப்பின்

| | வேலைசெய்யும் நேரம் மணித். | வீடு, பொழுதுபோக்கு | சுதந்திரமாக இருத்தல் | உணவு, நித,திரை, கழிவு |
|---|---|---|---|---|
| ஆண் | 6,12 | 2,14 | 3,14 | 11,11 |
| பெண் | 5,11 | 4,13 | 2,15 | 11,11 |

இந்த வகையில் உள்ள புள்ளிவிபரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் சிலவிடயத்தில் வேறுபாடு கண்டபோதும் பொதுவாக சமனாகக் காணப்படுகின்றது. ஆனால் சம்பள வேறுபாடு பாரியளவில் வேறுபடுகின்றது. இந்த ஏற்றத்தாழ்வு என்பது எதிர்காலத்தில் நீங்கினாலும் கூட ஆணாதிக்கம் தொடர்வது தவிர்க்கமுடியாது. கூலியில் உள்ள வேறுபாட்டை நாம் பார்ப்போமாகின்

| வேலை | பெண் | ஆண் | அதிகரிப்பு |
|---|---|---|---|
| *பாதுகாப்புத்துறை* | 1,96,200 F | 2,69,000 F | +37 % |
| *தொ.நுட்பவியல்* | 1,15,800 F | 1,37,300 F | +18 % |
| *அலுவலகங்கள்* | 86,800 F | 96,600 F | +11 % |
| *தொழிலாளர்* | 72,100 F | 93,600 F | +29 % |

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் காணப்படும் இந்த சம்பள வேறுபாடு சட்டப்படி கிடையாது. ஆனால் ஒரே தொழிலுக்கு வழங்கப்படும் வேறுபட்ட சம்பள வீதம் தொடர்ந்தவண்ணமே உள்ளது. இங்கு தொழிலாளர்கள், அலுவலர்கள் சம்பளம் உண்மையில் மேல் உள்ளபடி கையில் கிடைப்பது அல்ல. மாறாக இவை வரிகளை உள்ளடக்கியதே. அதாவது பென்சன், மருத்துவம், வேலையில்லாதார் வரி என பல வரிகள் கழிக்கப்பட்டபின் ஒரு பிரஞ்சு தொழிலாளி வருடம் பெறும் தொகை 60,000 F கள் மட்டுமே. அது பெண் தொழிலாளிக்கும் பொருந்தும். மாதச்சராசரி 5000F களை வருமானமாகப்பெறும் ஆகக்குறைந்த சம்பளவிகிதம் பெண்ணுக்கும் ஆணுக்கும் சமனாகவே உள்ளது. இது அலுவலர்களுக்கு இடையில் அதிகவேறுபாடு இல்லை என்பது முக்கியமாகும். சம்பளமாகப் போட்டு மூன்றிலொரு பங்கு அரசுக்கு சம்பளம் தரும்போதே கட்டப்பட்டு விடுகின்றது. மிகுதியாகப்பெறும் மூன்றிலிரண்டு பங்கில் பொருட்கள், மற்றும் பாவனைப்பான வரியாக 20.6 வீதம் நேரடியாக அரசுக்குச் செல்கின்றது. இதைவிட தொலைக்காட்சி வரி, வீட்டுகாப்புறுதி வரி, குப்பை அள்ள வரி, மின்சாரவரி, தொலைபேசி வரி என எண்ணற்ற வரிகள் நேரடியாகக் கோரப்படுகின்றது.



அண்மையில் 18.6 வீதமாக இருந்த பொருட்களுக்கான மற்றும் பாவனைக்கான வரி 2 வீதமாக அரசு திடீரென அதிகரித்துள்ளது. இந்த 2 வீத அதிகரிப்பின் மூலம் அரசு திரட்டும் பணம் 1,21,000 கோடி இலங்கைப்பணம் ஆகும். பிரஞ்சு உழைக்கும் மக்கள் மீது வரிமூலம் சுமைகளை ஏற்றும் அதேநேரம் முதலாளிகளின் வரி குறைபடுகின்றது.

www.tamilarangam.net

ஒரு முதலீட்டாளியின் வரி 1987 இல் 100 வீதமாக இருந்ததெனின்

| | |
|---|---|
| 1988 | 84% |
| 1989 | 71% |
| 1991 | 54% |
| 1992 | 48% |

1987 இல் 100 வீதமாக முதலீட்டாளரின் வரி அறவிடப்பட்டது எனின், இது கடந்த 5 வருடத்தில் 50 வீதத்தால் குறைந்து 48 வீதமாக மாறியுள்ளது. அதாவது முதலாளிகளுக்கு சலுகையும், கொள்ளையடிப்புக்கு கதவுகளையும் திறந்துவிடவும் செய்யும் அரசு பிரஞ்சுத் தொழிலாளியின் முதகில் சுமைகளை ஏற்றுவது தொடர்கின்றது.
அரசு வரி மூலம் மொத்த சமூகத்தில் இருந்து பெறும் பணம் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் வேறுபடுகின்றது.

| | |
|---|---|
| பிரஞ்சு, இங்கிலாந்து | 52 முதல் 46 வீதம் வரை |
| ஜேர்மனி,ஒல்லாந்து,டென்மார்க்,இத்தாலி, அயர்லாந்து | 45 ,, 31 ,, ,, |
| ஸ்பானியா, சுவிஸ், பெல்ஜியம் | 30 ,, 25 ,, ,, |

அதாவது ஒன்றிணைந்த ஜரோப்பாவில் இவ்வரிவேறுபாடு என்பது காலப்போக்கில் பல சிக்கல்களை உருவாக்கவுள்ளது. இவ்வரி வேறுபாடு ஒருபுறம் இருக்க ஒரு தொழிலாளியின் சம்பளத்துக்கு தனியாக மொத்தவரி விதிக்கப்படுகின்றது. உதாரணமாக திருமணமோ அல்லது குழந்தையோ இல்லாது இருப்பின் ஒருமாதச்சம்பளம் வரியாகக் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. கணவன், மனைவி ஒன்றாக இருப்பின் குழந்தை இல்லாது இருப்பின் இருவரின் ஒருமாதச்சம்பளம் வரியாக அரசு பெறுகின்றது. இப்படியாக பிரஞ்சு சமூகம் வரிகள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு அதியுயர் சுரண்டலுக்கு கதவு திறந்துள்ளது. இங்கு தொழில்களைப் பொறுத்தவரையில் ஏதாவது ஒரு முதலீட்டை உள்ளடக்கிய மொத்த தொழிலமைப்புக்கள் 23 இலட்சமாகவுள்ளது. இதில் 21 இலட்சம் சிறுமுதலீடுகளை உள்ளடக்கியது. மிகுதி 2 இலட்சம் தொழில்கள் தான் மிகஅதிகளவிலான முதலீகளைத் தன்னகத்தே உள்ளடக்கியது.
இன்று புதிதாக தொழிலை தொடங்கவிரும்புவோர் குறைந்தும் மற்றும் அதில் தோல்வி காண்பது அதிகரித்துச் செல்கின்றது.

## உருவாகும் வேலைகள்

| | |
|---|---|
| தனிப்பட்ட உற்பத்தியை செய்ய விரும்புவோர் | 6 இலட்சம் பேர் |
| தனிப்பட்ட உற்பத்தியை செய்ய திட்டம் வைத்திருப்போர் | 35 முதல் 40 இலட்சம் பேர் |
| ஒவ்வொரு வருடமும் புதிதாக வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவோர் | 6 முதல் 7 இலட்சம் பேர் |
| புதிய உற்பத்தி (ஒவ்வொரு வருடம்) (புதிதாக,மீள் உருவாக்கம்) | 2,2 இலட்சம் பேர் |
| 2 வருடம் நீடிக்கும் தொழில் | 1,6 இலட்சம் |
| 5 வருடம் நீடிக்கும் தொழில் | 1,1 இலட்சம் |
| 5 வருடமும் அதற்குக்கூடவும் நீடிக்கும் தொழில் | 7000 மட்டுமேயாகும். |

அதாவது 5 வருடத்தின் பின் நீடிக்கும் வகையில் தொழில்கள் எஞ்சுவது 7000 மட்டுமே என்பது கவனிக்கத்தக்கது. 2,2 இலட்சம் தொழில்களில் மிஞ்சுவது என்னவோ 7000 மட்டுமே. அதேநேரம் பிரஞ்சு மொத்த சனத்தொகையில் 10 வீதமானோர் புதிய முதலீட்டை செய்ய விரும்புகின்றனர். ஆனால் 5 வீதம் மட்டுமே திட்டத்தை வைத்துள்ளனர். அதேநேரம் உருவாகும் தொழில் முயற்சியில் ஈடுபடுவோர் 37 வீதமானோர் மட்டுமேயாகும். இதன் மூலம் தொழில் பெறுவோர் மொத்த பிரஞ்சு மக்களில் 1.2 வீதமானோர் மட்டுமேயாகும். இதைத் கீழுள்ள அட்டவணை மூலம் ஆராய்வோமாயின்

உற்பத்தியில் ஈடுபடுவோர் (புதிய)

| ஆண்டு | மொத்தமாகத் தொழில் கிட்டத்தட்ட | புதிய தனியார் | மீளப்புதியது | மீள இடுபடுவது |
|---|---|---|---|---|
| 1987 | 2.90,000 | 1.90.000 | 60.000 | 40,000 |
| 1993 | 2.73.500 | 1,70,000 | 54,400 | 54,400 |

www.tamilarangam.net

கடந்த ஆறுவருடத்தை எடுத்து ஆராய்வோமாகில் புதிய முதலீட்டில் ஈடுபடுவோர் எண்ணிக்கை குறைந்து வந்துள்ளது. வளர்ச்சி பெற்ற பெரும் ஏகபோக முதலீட்டாளர்களுடன் போட்டிபோட முடியாத வகையில் தொழில் ரீதியாக மூடப்படுகின்றன. அத்துடன் இந்நிலை ஏற்பட என்ன காரணங்கள் என ஆராய்வோமாயின்

1. கடைகளில் 70 வீதம் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. ஏன்
   அ. விற்பனை இலக்கை இழந்துள்ளது.
   ஆ. இழப்பை ஈடுசெய்ய முடியாமை.
   இ. உற்பத்தி பற்றாக்குறை.
2. தொழிலை பராமரிப்பதில் 40 வீதம் நெருக்கடி உள்ளாகியுள்ளது.
   அ. நிதியின்மை
   ஆ. நிர்ணயம் செய்ததைவிட அதிகளவு செலவு.
   இ. வாங்குவோர் பணத்தைக் கொடுக்காமை.
3. தொழில்நுட்ப நெருக்கடி 30வீத நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.
   அ. தரமின்றிய உற்பத்தி
   ஆ. தேவையான தொழில்நுட்பம் இல்லை.
   இ. பிழையான உற்பத்தியில் ஈடுபடுதல்.
4. கூட்டுதொழிலிலுள்ள நெருக்கடி 15 வீதம்
   அ. குடும்பப்பிரச்சனை
   ஆ. சேர்ந்த துணை நெருக்கடி

இந்த வகையில் மொத்த உற்பத்தியும் நெருக்கடிக்கள்ளாகி வருகின்றது. இது இன்று வேலையின்மையை ஏற்படுத்தி சமூகநெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.
இன்னுமொரு புறத்தில் சிறுஉற்பத்திகள் நெருக்கடிக்குள்ளாக பெரிய பாரிய முதலீட்டு நடவடிக்கைகள் காரணமாக உள்ளன. உதாரணமாக 1993 ஆண்டு புள்ளிவிபரப்படி கடைகள் தொடர்பாக வரிவரியாக ஆராய்வோமாயின் அதிர்ச்சியைக் கொடுக்கும். இன்று உப்பு, புளி முதல் கம்பியூட்டர் ஈறாக கொண்ட பாரிய கடைகள் உருவாகி வருகின்றது.

ஒரு இலட்சம் பேருக்கு இதுபொன்ற கடைகள் எத்தனை உள்ளது என ஆராயின்

பிரான்ஸ் 1.5
இங்கிலாந்து 1.3
ஜெர்மனி 1.3
பெல்ஜியம் 1

என்ற விகிதத்தில் எங்கும் காணப்படுகின்றது. இது மற்றைய கடைகளுடன் ஒப்பிடும்போது மலிவான விலையைக் கொண்டிருப்பதுடன் எல்லாப்பொருட்களையும் ஒரே கடையில் வாங்கிவிட முடியும். இப் பெரிய பூதாகரமான கடைகள் தமக்குள்ளும் விழுங்கிக்கொள்வது ஒரு வழமையாகிவிட்டது. இக்கடைகள் தனிநாட்டு எல்லையைத்தாண்டி மற்றைய நாடுகளில் கால்களைப் பதித்துள்ளது. மற்றும் நிதிக்கடன்களையும் கொடுக்க தொடங்கியுள்ளதுடன் இவை ஒரு பாரிய நிதி நிறுவனமாகவும் மாறிவருகின்றது. உதாரணமாக carrefour ஐரோப்பாவில் 50வது மிகப்பெரிய கம்பனியாகும். பிரான்சில் 5வது பெரிய நிறுவனமாகும். பிரான்சில் காணப்படும் மிகப்பெரிய கடைகளை வகைப்படுத்தலில் நாம் ஈடுபடின்

இடைநடுகடைகள் 660 சதுரமீற்றர் பரப்புக் கொண்டவை. ( தரமானவை- 1010 சதுரமீ.)
இவை குறைந்தது 1000 உற்பத்தியை தாம் செய்கின்றன. அதேநேரம் பெரிய கடைகள் 10,000 க்கு மேல் வெவ்வேறு விதமான உற்பத்தியை செய்கின்றன.

கடைகளின் வகைகளும் அதன் பரப்பளவும் (சதுரமீற்றரில்)

Superelte 100- 400
Super marche' 401- 2500
Hyper marche 2501- 24, 000

இந்த வகையில் வகைபிரிக்கப்பட்ட கடைகள் பிரான்சில் எத்தனை எவ்வளவு முதலீட்டுடன் உள்ளன என அனைத்தையும் ஆராய்வோமாயின்

| கடைகள் | முதலீடு இலங்கை நாணயத்தில் கோடி ரூபாயில் | கடை எண்ணிக்கை | பரப்பு சதுரமீற்றரில் | வேலையாள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | | |
|---|---|---|---|---|
| Carrefour | 1,44,430 | 133 heper | 14 இலட்சம் | 76,000 |
| Continent | 1,39,480 | 61 heper, 446 super champion , 1875 super shop | 14 இலட்சம் | 47,000 |
| Centre lectne | 1,25,400 | 263 hyper 264 super | 15 இலட்சம் | 51,000 |
| intermache | 1,24,850 | 46 hyper 1530 super | 2,1 இலட்சம் | 65,000 |
| Auchan | 88,000 | 62 hyper | 4,8 இலட்சம் | 24,000 |
| Casino | 70,400 (1992இல்) | 56 hyper, 1285 super | 13 இலட்சம் | 44,000 |
| மொத்தம் | 6,92,560 | 629 hyper 5400 super | 81,8 இலட்சம் | 3,09,000 |

இந்த வகையில் உள்ள ஆறு மிகப் பெரிய முதலீட்டு நிறுவனங்கள், பல ஆயிரம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அதே நேரம் 7 இலட்சம் இலங்கைக் கோடிகளை முதலிட்டுள்ளனர். மொத்தமாக 3,1 இலட்சம் பேருக்கு மட்டும் வேலையை வழங்கும் இந்த முதலீட்டாளர்கள் பல சிறு உற்பத்திகளையும், கடைகளையும் மூடவைத்துள்ளனர். இந்த நிகழ்வு என்பது 1980 களுக்குப்பின்பு நிகழ்ந்துவருபவை தான். இதை ஆராய்வோமாயின்

மிகப்பெரிய கடைகள் திறத்தல் தொடர்பாக

| ஆண்டு | Heper | | | super | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த சதுரமீற்றரில் (இலட்சம்) | திறந்த புதிய கடைகள் | மொத்த கடை | மொத்த சதுரமீற்றரில் (இலட்சம்) | திறந்த புதிய கடைகள் | மொத்த கடை |
| 1987 | 38,7 | 14 | 694 | 54,5 | 345 | 5912 |
| 1988 | | 25 | 759 | | 319 | 6100 |
| 1989 | 43,2 | 21 | 809 | 61,0 | 363 | 6400 |
| 1990 | | 18 | 861 | | 355 | 6550 |
| 1991 | | 14 | 907 | | 325 | 6200 |
| 1992 | 52,8 | 17 | 950 | 70,0 | 398 | 7100 |
| 1993 | 56,0 | 5 | 945 | 72,0 | 300 | 7400 |

இந்த வகையில் பெருகி வரும் பெரிய கடைகள் தமக்குள் விழுங்கிக் கொள்வதன் மூலம் இந்நிலையை அடைந்துள்ளது. 1957 க்கு முதல் பெரிய கடை 400 சதுரமீற்றர் பரப்பைக் கொண்டதாக இருந்தது. 1960 இல் உருவான corrfour 850 சதுரமீ. பரப்பை மட்டுமே கொண்டிருந்தது. 1991 இல் முதன்முதலில் 1,10,000 கோடி இலங்கை ரூபா முதலீட்டை (10000 கோடி பிராங்குகள்) முதன்முதலில் இக்கடைகள் தொட்டன. ஆகப்பெரிய கடையை 1993 இல் corrfour 24,000 சதுரமீற்றரில் அமைத்தது. 1988 இல் ஒரு மிகப்பெரிய கடை மட்டுமே இருந்தது. 1993 இல் 749 hyper கடைகளாக இருந்து 1994 இல் 1000 கூடுதலாக அதிகரித்தது. அதே நேரம் 1992 இல் 58 வீதமாக புதிய கடைத்திறப்பு இருந்தது. இது 1993 இல் 70 வீதமாக அதிகரித்தது. 1993 இல் இருந்த hyper கடைகளில் 399 பிரஞ்சு முதலாளிகளுடையது. 350 வெளிநாட்டுக் கடைகள் ஆகும். அதேநேரம் இதில் வேலைசெய்யும் தொழிலாளர் எண்ணிக்கை 1992 இல் 52 வீதமாக இருந்து 1993 இல் 70 வீதமாக அதிகரித்தது. இதேநேரம் இது பிரஞ்சு மக்களின் தேவை, மற்றும் உற்பத்தியில் பாரிய கட்டுப்பாட்டைக் கொண்டு உள்ளது. அவர்களின் விற்பனை உற்பத்தி என்பன பற்றி ஆராயின்

இக்கடைகளில் விற்பனை செய்யப்படுவதில

உற்பத்தி செய்து விற்பது 55 வீதம்
உற்பத்தி செய்யாத விற்பனை 45 வீதம்

குறிப்பாக பிரஞ்சுத் தேவையில் இறைச்சி விற்பனையில் 46 வீதத்தையும் பழம் + மரக்கறி 50 வீதத்தையும் பாண் வகைகள், கேக்குகள் 40 வீதத்தையும் தாமே உற்பத்தி செய்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளனர். இந்த உற்பத்தி என்பது அதிகரித்துச் செல்வதை கீழ் உள்ள அட்டவணை நிறுவுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| உற்பத்தியும் விற்பனையும் (%) | | | | உற்பத்தி செய்யாத விற்பனை (%) | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | குடிவகை போமால் பால்வகை | | | ரிவி,கமரா,வீடியோ,..........இலக்ரோனிக் | | |
| | பெரிய கடை | சிறிய மத்திய கடை | வேறுவித மாக | பெரிய கடை | சிறிய கடை | |
| 1980 | 44,6 | 40,6 | 14,8 | 16,5 | 55 | |
| 1988 | 56,1 | 30,3 | 13,6 | — | — | |
| 1992 | 60,6 | 26,2 | 13,2 | 31,8 | 45,8 | |

பெரியகடைகள் சிறிய கடைகளை விழுங்குவதன் மூலம், மற்றும் உற்பத்தி விற்பனையில் பெரிய அளவு பங்கு வகிப்பதாலும் சிறிய உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் மூடப்படுகின்றன. இதன் மூலம் பாரிய வேலையின்மை ஏற்படுவதுடன், சமூக நெருக்கடி உருவாகின்றது. பிரான்சில் உருவாகும் வேலைவாய்ப்பு சிறிய தொழில் அதிகளவாக உள்ளதும் பெரிய தொழில்கள் குறைவாக உள்ளதும் கவனிக்கத்தக்கது. சிறிய தொழில்களின் மூடுவிழாவை பெரிய தொழில்கள் தொடக்கி வைக்கின்றன.

1993 புதிதாக உருவான வேலைவாய்ப்புகளை ஆராயின்

1,26,299 சொந்தமாக வேலை செய்வோர்
31,081 வேலை இடத்தில் வேலைசெய்வோர் 1- 2 பேர்
6,801 வேலை ,, ,, ,, 3- 5 பேர்
1714 ,, ,, ,, ,, 6- 9 பேர்
1884 ,, ,, ,, ,, 10- 19 பேர்
497 ,, ,, ,, ,, 20

தனித்தொழில் சிறு தொழில்களில் பெரும் தொகையில் மக்கள் ஈடுபடுவதால் அதன் மீது பெரும் நிதி நிறுவனங்கள் தாக்குதலில் அங்கு வேலையிழப்பு அதிகரித்துச் செல்கின்றது. இதைக் கட்டுப்படுத்தமுடியாத வகையில் சிறுதொழில் மூடுவிழா வேலையின்மையை மேலும் மோசமாக்கி சென்றவண்ணம் உள்ளது.

1994 இல் பிரான்சில் முதலீட்டு ரீதியில் நெருக்கடிக்கு உள்ளாகி வரும் தொழில் சொத்துக்களின் அடிப்படையில் ஆராயின்

| முதலீடு F | நெருக்கடி சந்திப்பவை |
|---|---|
| 0- 10,000 | 20 வீதம் |
| 10,000- 26,000 | 16 ,, |
| 26,000- 50,000 | 20 ,, |
| 50,000- 1,00,000 | 23 ,, |
| 1,00,000- 2,50,000 | 13 ,, |
| 2,50,000- 5,00,000 | 5 ,, |
| 5,00,000- 10,00,000 | 2 ,, |
| 10,00,000 - ---> | 1 ,, |

சிறு முதலீடுகளில் ஏற்படும் நெருக்கடியை மேலுள்ள அட்டவணை மேலும் தெளிவாக்குகின்றது. இன்று வேலையில்லாத்திண்டாட்டத்தை எடுத்து ஆராய்வோமாயின் ஐரோப்பிய நாடுகளில் மொத்த வேலையின்மை 1993 இல் 1 கோடி 80 இலட்சம் பேர் ஆவர். இது ஸ்பெயினில் 23 வீதமாக உள்ளது. இதிலும் 15 தொடக்கம் 24 வயது வரையிலான இளம் சந்ததியில் வேலையின்மை அதிகமாக உள்ளது. இதை 1993 ம் ஆண்டு புள்ளிவிபரத்தைக் கொண்டு ஆராய்வின்

ஸ்பெயின் 43.2 வீதம்
இத்தாலி 30.6 வீதம்
பின்லாந்து 30.5 வீதம்
கிறிஸ் 28.8 வீதம்
அயர்லாந்து 25 வீதம்
பிரான்சு 24.6 வீதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கிலாந்து 17.3 வீதம்
அமெரிக்கா 13.3 வீதம்
ஜெர்மனி 8.2 வீதம்
யப்பான் 5.2 வீதம்

ஐரோப்பிய சமூகத்தில் இளைஞர் சமுதாயம் முழுமையாகச் சூறையாடப்படுகின்றது. உழைக்கக்கூடிய உடல் பலம் உள்ள இப்பிரிவினர் அரசின் கொடூர சூறையாடும் சுரண்டும் நோக்கில் கைவிடப்படுகின்றனர். இவர்கள் 25 வயதுக்கு முன் எந்த உதவியையும் அரசிடம் பெறமுடியாது என்ற அடிப்படைக்காரணத்துடன், இயல்பாக பெற்றோரைச் சார்ந்து வாழ நிர்ப்பந்திக்கின்ற வழிகளில், இச்சுரண்டும் அரசுகள் சமூக நெருக்கடியை இளம் சந்ததி மீது சுமத்துகின்றது. ஆனால் இது மறுபுறம் லும்பன் வாழ்வை நகர்த்துவதுடன், வன்முறைக்கும்பல்களை உருவாக்குவதுடன் நவீன நாசிகளையும் உருவாக்கித்தள்ளுகின்றது. இந்நாடுகளில் அரசு உதவியில் சார்ந்து மட்டும் வாழும் மொத்த உழைக்கும் தகுதியுள்ளவர்களின் புள்ளிவிபரத்தை ஆராய்வின்

ஸ்பெயின் 18 வீதம்
அயர்லாந்து, டென்மார்க் 12 வீதம்
பெல்ஜியம் 10 ,,
நெதர்லாந்து 8 வீதம்
பிரான்சு 7 வீதம்
சுவிஸ், இங்கிலாந்து 5 வீதம்
ஜெர்மனி 4 வீதம்
போர்த்துக்கல் 2 வீதம்
லக்சம்பேர்க் 1 வீதம்

இந்த புள்ளிவிபரப்படி அரச உதவியைச் சார்ந்துள்ளவர்கள் மிகக்குறைவான அடிப்படைத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத வாழ்வை வாழ்கின்றனர். உதாரணமாக பிரான்சில் ஆகக்குறைந்த சராசரி பணக்கொடுப்பனவு 2000 பிராங்காகும். இதைக் கொண்டு வீட்டுவாடகையைத்தானும் கட்ட முடியாது. இதனால் வீட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இன்று பிரான்சில் ஆறுலட்சம் பேர் வீதிகளில் வசிக்கின்றனர். இன்று எந்தப் புகை வண்டியிலும் பிச்சை கேட்பவர்களை சாதாரணமாகச் சந்திக்க முடியும். இது 5 வருடத்திற்கு முன் கிடையாது.

இன்று வீட்டுப்பிரச்சனை என்பது ஒருபெரும் பிரச்சனையாக மாறியுள்ளது. இன்று பிரான்சில் 6 இலட்சம் பேர் வீதிகளில் வசிக்கும் அதே நேரம் 10 இலட்சம் பேர் அரசிடம் வீடு கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இதேநேரம் 50 இலட்சம் வீடுகள் அடிப்படை வசதியற்ற மிக மோசமான வீடுகள் ஆகும். இந்நிலையில் 20 இலட்சம் வீடுகள் யாருக்கும் கொடுக்காமல் வாடகை உயர்ந்த வகையில் தீர்மானிக்க பூட்டி வைக்கப்பட்டுள்ளது. 5, 10 வருடமாக பாரிய மாடிக்கட்டடங்கள் வாடகைக்கு கொடுக்காது பூட்டப்பட்டுள்ளது. இதை அரசு எடுத்து விநியோகிக்க வேண்டும் எனக் குரல்கள் எழும் இன்றைய நிலையிலும் அரசு மறுத்து வருகின்றது. அதைத் தனிமனித உரிமை என நியாயப்படுத்துகின்றது. இந்நிலையில் வீடு தேடுவோர் ஒருசங்கமாக இணைந்துள்ளனர். 5,10 வருட வாடகைக்கு கொடுக்காத பூட்டிய வீடுகள் திடீர் எனப்புகுந்து கைப்பற்றுவதும், அதை விநியோகிப்பதும் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் வீட்டுவாடகை எந்தவித கட்டுப்பாடும் இன்றி தனிப்பட்ட முதலாளிகள் அதிகரித்துச் செல்கின்றனர். இது வருடம் வருடம் தொடர்கதையாக உள்ளது. அதாவது பொருட்களை தேங்க வைத்து அதைக் கடலில் கொட்டி விலையைக் கூட்டுவது போன்று, வீட்டைக் கொடுக்க மறுத்து பூட்டுவதன் மூலம் வீட்டுத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையைக் கூட்டுகின்றனர். பிரான்சில் உள்ள பூட்டிய வீடுகள் 20 இலட்சத்தையும் பங்கிடின் பிரான்சில் வீட்டுப்பிரச்சனை தீர்வதுடன், வீட்டுவாடகையும் வீழ்ச்சி காணும். அத்துடன் பணக்காரர் பாவனையிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
பிரன்சு மக்களின் வீடுவாங்கும் தன்மை குறைந்து செல்கின்றது. இது சொந்த பணத்திலோ அல்லது 10 முதல் 20 வருட நீண்ட கடனடிப்படையிலும் வாங்குவது குறைந்துள்ளது.

| ஆண்டு | வாங்கிய வீடு |
|---|---|
| 1985 | 5,06,000 |
| 1986 | 5,19,000 |
| 1987 | 5,69,000 |
| 1988 | 5,27,000 |
| 1989 | 4,84,000 |
| 1990 | 4,73,000 |
| 1991 | 4,19,000 |
| 1992 | 3,68,000 |

www.tamilarangam.net

மற்றும் இங்கு வாடகையும் 20 வருட கடன் வாங்கிய சொந்தவீட்டுக்கு கட்டும் கடன் பணமும் கிட்டத்தட்ட சமனாக இருந்தும் வீடு வாங்குவது வீழ்ச்சியடைந்துள்ளது. காரணம் மக்களின் சமூகப் பொருளாதார நெருக்கடியேயாகும்.

அத்துடன் அலுவலக தேவைக்கு எனக் கட்டிய கட்டடங்கள் எந்தவித பயன்பாடும் இன்றி வருடக் கணக்கில் மூடியபடி உள்ளது. இதன் பரப்பளவு தலைநகரில் மட்டும் 43,00,000 சதுர மீற்றராகும். இதை 100 சதுரமீற்றராக கொண்ட பெரிய வீடுகளாகப் பிரிப்பின் 43,000 வீடுகளை உருவாக்க முடியும். இந்தப்புள்ளிவிபரங்கள் பாரிசுக்குள் மட்டும் எடுக்கப்பட்டவையே. இந்தக் கட்டிடங்களை வீடுகளாக்கும்படி போராட்டங்கள் நடக்கத் தொடங்கியுள்ளது. அடுத்து பாரிசில் வாழும் எண்ணிக்கை குறைந்து செல்கின்றது. அதிகரித்த வாடகை, மற்றும் கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையில் ஏற்றத்தாழ்வு குறைந்து செல்வது முக்கிய காரணமாகும். பாரிசில் வாழும் எண்ணிக்கையை ஆராயின்

போராடும் தொழிலாளிகளின் அலுவலகம்



| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1962 | 28,00,000 |
| 1968 | 26,00,000 |
| 1975 | 23,00,000 |
| 1982 | 21,70,000 |
| 1990 | 21,50,000 |

பாரிசில் வாழும் எண்ணிக்கை குறைந்து சென்ற அதேநேரம் அங்கு தொழில் நிமித்தம் எப்படி பிரிந்து உள்ளனர் எனப்பார்ப்போம்.

| வேலை | 1982 | 1990 |
|---|---|---|
| முதலாளிகள், சிறுகைவினையர்கள், கடை உரிமையாளர் | 81,000 | 79,900 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| உயர் அதிகாரிகள் | 2,45,000 | 3,42,500 |
| நடுத்தரமான தகுதியுடைய வேலையாட்கள் | 2,14,100 | 2,38,600 |
| அலுவலர்கள் | 3,58,400 | 2,93,400 |
| தொழிலாளி | 1,95,400 | 1,64,300 |
| ஓய்வுபெற்றோர் | 3,22,500 | 3,34,500 |

இந்தப் புள்ளிவிபரப்படி பாரிஸ் நகரில் இருந்து அடிமட்ட ஊழியர்கள், தொழிலாளிகள் எண்ணிக்கை குறைந்து செல்கின்றது. பாரிஸ் நகரிலிருந்து தொழிலாளர்கள் குறைந்து செல்வதும் அதிகரித்த வாழ்க்கைச் செலவும் இதைத்தூண்டுகிறது. பிரான்சின் பல்வேறு துறைகளில் கடந்த 15 வருடத்தை எடுத்து ஆராய்வோமாயின்

1. 1981 இல் 53 இலட்சமாக இருந்த இயந்திரம் சார்ந்த தொழிலாளர் எண்ணிக்கை 1994 இல் 41 இலட்சமாக குறைந்துள்ளது.
2. 1981 இல் 10 வீதமாக இருந்த சம்பளக்கோரிக்கைப் போராட்டம் 1994 இல் 5 வீதமாகக் குறைந்தது.
3. 1981 இல் 40.64 மணிநேர வேலையாக இருந்து 1994 இல் 38.96 ஆகக் குறைந்துள்ளது.
4. 1981 இல் 18,00,000 நாள் வேலைநிறுத்தம் நடைபெற்றது. 1994 இல் 7,46,000 ஆகக் குறைந்துள்ளது.
5. 1981 இல் 18 வீதமாக பணத்தைச் சேமித்த தன்மை 1995 இல் 14 வீதமாகக் குறைந்தது.
6. 1981 இல் 18 இலட்சமாக இருந்த வேலையில்லாத்திண்டாட்டம் 1994 இல் 33 இலட்சமாக அதிகரித்தது.
7. 1981 இல் 8090 கோடி பிராங்குகள் பற்றாக்குறையாக இருந்த பட்ஜட் 1995 இல் 32180 கோடி அதிகரித்தது.
8. 1981 இல் 41,9 வீதமாக இருந்த வரிகள் 1995 இல் 44.2 வீதமாக அதிகரித்துள்ளது.
9. 1981 இல் 660 கோடி பிராங்குகள் மருத்துவ நெருக்கடி 1995 இல் 2300 கோடியாய் அதிகரித்தது.
10. இல் 4,26,800 மாக இருந்த அரச உதவி பெறுவோர் 1995 இல் 9,46,800 ஆக அதிகரித்துள்ளது.

மேலே எடுத்துள்ள 10 விடயங்களை எடுப்பின் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வகையில் பாரிய நெருக்கடியை பிரன்சு சமூகம் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. உதாரணமாக இயந்திர தொழிலிலிருந்து கடந்த 13 வருடத்தில் 12 இலட்சம் பேரை வேலையை விட்டு நீக்கி உள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர். வேலையை விட்டு நீக்குவதை ஆராயின்

| ஆண்டு | வேலையை வழிநடத்துபவர்கள் | வேலையாட்கள் |
|---|---|---|
| 1983 | 2,19,000 | 6,50,000 |
| 1998 | 1,10,000 (-50 வீதம்) | 4,50,000 (-30வீதம்) |

இதேபோன்று துணித்துறையைச் சார்ந்து ஐரோப்பா முழுக்கு ஆராயின்

| | தொழிலாளர் | தொழில்நுட்ப வியலர் | உருவாக்குவோர் டிசைனர் | நிர்வாகிகள் விற்பனையாளர் |
|---|---|---|---|---|
| 1992 | 10,65,000 | 1,02,000 | 48,000 | 1,34,000 |
| 2002 | 6,10,000 -42 % | 67,000 -34 % | 51,000 +6,2 % | 1,56,000 |


தொழிலாளர் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கை குறைவதும் அதிகரித்துச் செல்கின்றது. அதேநேரம் சிலதுறைகளில் முதலீட்டாளர்கள் குறையும் அதேநேரம் சிலதுறையில் அதிகரிக்கின்றனர். இப்படி அதிகரித்துச்செல்லும் வேலை இழப்புக்கு இந்த சமுதாளத்தில் இந்த அமைப்புக்குள் தீர்வு எதுவும் தேடிவிட முடியாது.

இதற்கு எதிராக தொழிற்சங்க வெறும் பொருளாதார போராட்டங்கள் கூட கடந்த 13 வருடத்தில் 10 வீதத்திலிருந்து 5 வீதமாகக் குறைந்துள்ளது. இதைக் கடந்த 20 வருடத்தில் எடுத்து ஆராயின்


1974- 79 களில் வருடம் சராசரி 40 இலட்சம் வேலைநாள் வேலைநிறுத்தம் நடைபெற்றது.
1981- 85 ,, ,, ,, 15 ,, ,, ,, ,,
1992- 94 ,, ,, ,, 5 ,, ,, ,, ,,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



மேற்கண்டவாறான வகையில் வேலைநிறுத்தம் குறைந்து சென்றுள்ளது. தொழிற்சங்கங்களின் சீரழிவு, கம்யூனிஸ்கட்சியின் காட்டிக்கொடுப்புக்கள் உடன் மக்களின் மேலான சுமை அதிகரித்து முகம் கொடுக்கமுடியாத நெருக்கடிகள் ஊடாகவே போராட்டங்கள் தண்ணீரூற்றி அணைக்கப்பட்டன. இதேநேரம் இவ்வருடங்களில் நடந்த ஊர்வலங்கள் பெட்டிசன்களை ஆராயின்






இந்த வரைபுப்படி பெட்டிசன் போடுவதுடன் தங்களை நிறுத்திக் கொள்ளும் வகையில் போராட்டம் கீழிறக்கப்பட்டது. அதன் எண்ணிக்கை அதிகரித்து போராடுவதுக்குப் பதில் வேண்டுகோள்கள் மூலம் தொழிலாளர் போராட்ட உணர்வுகளை கீழிறக்கி அழித்து வருகின்றனர்.

மக்களின் கீழிறங்கிச் செல்லும் வாழ்நிலையுடன் பிரஞ்சு சமூகத்தின் கடனும் அதிகரித்துச் செல்கின்றது. இன்று 35,20,00 கோடி ரூபாயை (இலங்கை) கடனாகக் கொண்டுள்ள பிரான்சில் 1989 ஐ விட இது இரண்டுமடங்காக உள்ளது. ஒவ்வொரு பிரன்சு மக்களின் மீதும் 6 இலட்சம் கடன் சுமை உள்ளது. 1996 ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 2,48,600 கோடி ரூபா வட்டிக்காக செலுத்தும் தொகை மொத்த வரவு செலவுத்திட்டத்தில் 8.2 வீதமாகும். இவை ஒருபுறம் இருக்க இன்னுமொரு பக்கம் பிரன்சு மக்களின் நாளாந்த வாழ்வில் அவனின் கடனை ஆராயின்

| | | | |
|---|---|---|---|
| வருமானம் | 5000 பிராங்குகள் | 9000 பிராங்குகள் | 21,000 பிராங்குகள் |
| வருமானத்தில் குடும்ப பழைய நிதிக்கடன் | 5 வீதம் | 10 வீதம் | 16 வீதம் |
| வருமானத்தில் குடம்ப பொருட்கடன் | 20 வீதம் | 42 வீதம் | 67 வீதம் |

இன்று உலகு எங்கும் எல்லா நாடுகளும் கடனாக உள்ளன. அது மக்களின் முதுகில் சுமத்தப்படுவதுடன், அக்கடனை கட்ட மக்களை நிர்ப்பந்திக்கின்றனர். ஆனால் அப்பணத்தை எப்படி செலவு செய்தனர் என யாரும் கேட்க முடியாது. கேட்டால் அடக்குமுறை மட்டுமே மிஞ்சி நிற்கின்றது. உலகில் எல்லா நாடும் கடன் எனின் யாரிடம் ? விரல்விட்டு எண்ணக்கூடிய சில பன்னாட்டுக்கம்பனிகள், நிதிநிறுவனங்களிடம் தான் உலக நாடுகளையே அடகு வைக்கப்பட்டு உள்ளது. அவர்களின் முதலை ஒருக்காலும் திருப்பிக்கொடுக்க முடியாத அளவுக்கு ஒருவருட சராசரி நாட்டு வருமானத்தையே மிஞ்சி செல்கின்றது. வட்டிக்காகவே ஒரு பெரும் தொகை செலுத்துவது தொடர்கிறது. இதைத் தகர்க்க இந்த சமுதாயத்தில் தீர்வு கிடையாது என்பது பிரான்சின் கடன் தொகையை வைத்தே புரிந்து கொள்ள முடியும். 1996 வரவுசெலவுத்திட்ட தேவை 30,97,600 கோடி இலங்கை ரூபா ஆகம். இது பிரான்சின் மொத்தக் கடனைவிட கிட்டத்தட்ட 5 இலட்சம் கோடி ரூபாய் குறைவாகும். அதேநேரம் பற்றாக்குறை 3 இலட்சம் கோடியாக ரூபாயாக உள்ளது.

அத்துடன் 31 இலட்சம் கோடி ரூபாய் வரவு செலவுத்திட்டத்தைக் கொண்ட பிரஞ்சு அரசு 16.5 இலட்சம் கோடி ரூபாயை வரிகள் மூலமே திரட்டுகின்றது. 5 இலட்சம் கோடி ரூபாயை கடனாக எதிர்பார்க்கும் இவ்வரசு மிகுதியை அரசு நிறுவனத்திலும், வட்டியாகவும் பெறுகின்றது.
அதாவது கிட்டத்தட்ட 10 இலட்சம் கோடியை இப்படி அரசு சேகரிக்கின்றது. அதேநேரம் அரசு சார்ந்த தொழிலிலுள்ள பிரஞ்சு உழைப்பாளிகள் 59 இலட்சம் பேர் மட்டுமேயாகும். மிகுதி 140 இலட்சம் பேரும் தனியார் தொழிற்றுறையிலுள்ளனர்.

அரசு தொழில் துறையிலுள்ளோர்.

| | |
|---|---|
| அரச அலுவலர், இராணுவம்,பொலிஸ் | 24,30,000 |
| ஆஸ்பத்திரி ஊழியர் | 15,26,400 |
| தொழிலாளர் | 84,100 |
| SNCF (மிகப்பெரிய புகையிரத சேவை) | 1,89,000 |
| RATF பஸ், பாரிஸ் புகையிரதம் | 69,000 |

www.tamilarangam.net

| | |
|---|---|
| மின்சாரம் + ஹாஸ் | 1,51,000 |
| கடல்படை | 1,14,300 |
| கணக்கு மற்றும் எழுதுவினைஞர் | 52,355 |
| சுரங்கத்தொழிலாளிகள் | 31,600 |
| பிரஞ்சுவங்கி | 28,700 |
| சமயவாதிகள் | 28,000 |



இந்தவகையில் அரசு தொழிற்றுறையில் தொழிலாளர்கள் பிரிந்துள்ளனர். இதை இன்று தனியார் மயமாக்கம் செய்யவும், வேலைநீக்கம் செய்யவும் எல்லாவித முயற்சியிலும் அரசு ஈடுபட்டுள்ளது. உதாரணமாக தொலைபேசித்துறையை தனியார் மயமாக்க தீவிரமாக முயல்கின்றது. அதன் தொடர்ச்சியாய் அமெரிக்கா அதைத் தீவிரப்படுத்தக் கோருகிறது. அதேநேரம் அரசு தனது இராணுவத்தின் எண்ணிக்கையை அரைவாசியாக்க தீவிரமான முயற்சியில் உள்ளது. ஏனெனின் அதிகாரிகளைக் கொண்ட ஒரு பெரிய படை வைத்து இருப்பதன் மூலம் எந்நேரமும் பெரிய படையை உருவாக்க முடியும் என இன்றைய நவீன இராணுவ உத்திகளை கொண்டு

www.tamilarangam.net

தீர்மானிக்கின்றனர். இன்றைய இராணுவத்தின் எண்ணிக்கையை அரைவாசியாக்குவதன் மூலமும், கட்டாய இராணுவப்பயிற்சியை ஒழிப்பது அல்லது காலத்தைக் குறைப்பது என்ற அரசின் இன்றைய முயற்சி மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீவிரமாக்க உள்ளது. இவ்விராணுவக் குறைப்பு எந்த விதத்திலும் இராணுவ ஒழிப்பை கொண்டது அல்ல. மாறாக இன்றைய நவீன தேவையைக் கொண்டு உருவாகுவதேயாகும்.

## இராணுவமும் அதன் பலமும்

| | தரைப்படை | வான்படை | கடற்படை | மொத்தம் |
|---|---|---|---|---|
| பிரான்ஸ் | 250,000 | 90,000 | 70,000 | 4,10,000 |
| இங்கிலாந்து | 1,16,00 | 70,500 | 50,500 | 2,37,000 |




இந்த வகையில் படையில் வேறுபாடு இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் இருந்த நிலையில் அண்மைய ஆக்கிரமிப்பீல் இங்கிலாந்து கூடுதல் செயல்பாட்டைக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

1991 இல் (GOLF) ஈராக் யுத்தம் இங்கிலாந்து 30,000 பேரை ஈடுபடுத்திய அதேநேரம் பிரான்சு 13,000 பேரை ஈடுபடுத்தியது. 1996 இல் பொஸ்னியாப் பிரச்சனையில் பிரிட்டன் 13,000 பேரை ஈடுபடுத்திய அதேவேளை பிரான்சு 10,000 பேரை ஈடுபடுத்தியது.

அதாவது குறைந்தளவு படைகளைக் கொண்டு பிரிட்டன் பெரிய அளவுக்கு ஆக்கிரமிப்பு படையை நகர்த்த முடிந்தது. இதை பிரான்சு பல்வேறு துறைகளில் இனம் கண்டு படைக்குறைப்பு செய்கின்றது.
ஒவ்வொரு வருடமும் கட்டாய இராணுவப்பயிற்சிக்கு தேவையான செலவு 13,200 கோடி ரூபாய் ஆகம். இது ஒவ்வொருவருக்கும் பயன்படும் செலவு 77 இலட்சம் ரூபா ஆகும். இதேநேரம் ஒவ்வொரு நபரையும் இணைத்துக்கொள்ள தேவையான ஒவ்வொரு நபருக்குமான வருடச்செலவு 15 இலட்சம் முதல் 22 இலட்சம் ரூபா வரை தேவைப்படுகின்றது. இது மொத்தமாக 15400 கோடி ரூபா முதல் 22,000 கோடி ரூபாவாகும்.

இதேநேரம் 1996 இல் 15 அணுக்குண்டை செய்ய ஒதுக்கிய பணம் 2,20,000 கோடி ரூபாவாகும். மறுபுறம் தொம்சன் என்ற உலகில் மூன்றாவது மிகப்பெரிய இராணுவ, இலக்ரோனிக் நிறுவனம் தனியார் மயமாக்க அரசு அறிவித்துள்ளது. இது ஒருபுறம் நடக்க இந்த வருடம் பல பொருட்கள் மீதான விலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவைகளை ஆராயின்


- ஆஸ்த்திரியில் தங்கி மருத்துவம் செய்யும் கட்டில் காசு 55 பிராங்கிலிருந்து 70 பிராங்குகளாக அதிகரித்துள்ளது. -27 வீதம்
- தொலைக்காட்சி வரி 670 பிராங்குகளிலிருந்து 700 பிராங்குகளாக அதிகரித்துள்ளது. - 45 வீதம்.
- சிகரட் விலை அதிகரிப்பு 4 வீதம்
- டீசல் விலை அதிகரிப்பு 3.98 கு இலிருந்து 4.14 கு -4 வீதம்.
- ரக்சி (வுயுஓஐ) கட்டணம் 3.1 வீதம் அதிகரிப்பு
- பெற்றோல் விலை 5.91 கு இலிருந்து 6.07 கு -2.7 வீதம்
- முத்திரை உள்ளூர் செலவு 2.8ீ கு இலிருந்து 3 கு அதிகரித்துள்ளது. (தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# 'முகம்' சினிமாவைப் பார்த்து 'முகம் இழந்தோ'ரின் புலம்பல்

அண்மையில் 'முகம்' சினிமா வெளிவந்தது. அதைத் தொடர்ந்து எம்மவர்கள் தம்மைத் தாமே கவிஞர்கள், சிறுகதை எழுத்தாளர்களென குறிப்பிட்டு புகழ்ந்து எழுதும் போக்கின் தொடர்ச்சியில் முகம் பார்த்து முகமிழந்தவர்கள் என்ற பெயரில் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருந்தனர்.

முகம் படம் தொடர்பாக பாரிசில் ஒரு சினிமா விமர்சனக்கூட்டம் நடைபெறும் என்ற கூற்றையெல்லாம் பொய்யாக்கி புகழ்பவர்களை மட்டுமே உள்ளடக்கிய விமர்சனக்கூட்டம் என்ற ஒரு பெயரால் ஒரு இரகசியப் பாராட்டும் கூட்டம் நடைபெற்றது. அங்குதான் இத் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதாம். இத் துண்டுப்பிரசுரம் முழுப் பூசனிக்காய்களை சோற்றில் புதைத்துவிட முடியும் என்ற அளவுக்கு புலம்பெயர்ந்த இலக்கியம் சினிமா தொடர்பாக புலம்பியுள்ளனர்.

> "படைப்பும் படைப்பாளியும் எங்கிருந்து
> வருகின்றான்?
> சுவரிலிருந்து ஓவியம்
> காலத்திலிருந்து காவியம்
> வரலாற்றிலிருந்து பகைப்புலம்
> ஈழத்து அகதிகள் வரலாற்றைப் பகைப்
> புலத்தின் கொப்பளிப்பு 'முகம்'."

என்று துண்டுப்பிரசுரம் தொடங்குகின்றது. முகம் படம் இதைச் சாதித்துள்ளதா? ஓர் அகதியின் முகத்தை முகம் படம் கொண்டுவரவில்லை. மாறாக ஓர் அகதியின் முகத்தை மூடிமறைத்தது மட்டுமன்றி, எம் யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்க சில குணம்சங்களில் நிறைவுபெறாத மனிதாபிமானத்தை படம் பேசுகின்றது. இதை அகதிகள் முகம் என்கின்றனர். இப்படம் ஒரே ஒரு துறையில் மட்டும் இந்திய சினிமாவில் இருந்து வேறுபடுகிறது. அதாவது மசாலா தனத்தை மட்டும் இப்படம் நிராகரித்துள்ளது. மற்றையபடி ஓர் இந்தியச் சினிமாவின் கதைக்கும், இந்தக் கதைக்கும் வேறுபாடில்லை. மத்தியதர வர்க்கத்தின் ஏதாவது ஒரு விடயத்தை முன்னெடுக்கும் இந்தியச் சினிமாவைப்போல் முகம் படம் இங்கு ஒரு மத்தியதரவர்க்க சினிமா உள்ளடக்கத்தைக் கொண்டு வெளிவந்துள்ளது. இப்படம் அந்த எல்லைக்குள் உள்ள மனிதாபிமான அடிப்படையைத் தொட்டதுடன் தன்னை நிறுத்திக் கொள்வதுடன் அதை விமர்சிக்க, அதை மீறத் தயாரற்று சமரசமாகிறது. அத்துடன் எம்மவர்களின் பல தவறான அம்சங்கள் நியாயப்படுத்தப்பட்டன. முதலாளி தொழிலாளி பிரச்சனையில் இரு நண்பர்களுக்கு இடையிலான பிரச்சனையில் உணர்ச்சிவசப்பட்டுவிட்டு ஓடும் லும்பன்தனம் நியாயப்படுத்தப்பட்டும், எதிர்த்துப் போராடும் போக்கு நிராகரிக்கப்படுகிறது. அத்துடன் எம்மவர்களின் ஆங்கில மோகத்துடன் கூடிய உயர்தொழில் மற்றும் கீழ்தொழில்களை கேவலமாகக் கருதும் போக்கு மறைமுகமாகப் படத்தால் நியாயப்படுத்துகின்றது. இப்படிப் பலவற்றை அடுக்கடுக்காகக் கூறமுடியும்.

சுவரிலிருந்தோ, காலத்திலிருந்தோ, வரலாற்றிலிருந்தோ ஓர் அகதியின் முகம் ஒரு துளிதன்னும் இப்படத்தால் வெளிப்படுத்தப்படவில்லை. ஓர் அகதி எதிர்நோக்கும் பிரச்சனைகள் என அடுக்கடுக்காக ஏராளம் உள்ளன. அவற்றையெல்லாம் இப் படம் கூறாமல் விடுவதன் மூலம் அகதியின் முகமாக மத்தியதர வர்க்கத்தின் சில குணாம்சத்தைக் காட்டுவதன் மூலம் பிரச்சனையை ரசிகன் மத்தியில் திசைதிருப்பியதன் மூலம், மறைமுகமாக இனவெறி அரசையும், ஏகாதிபத்தியத்தையும், நிர்ப்பந்தங்கள் மூலம் அகதி அந்தஸ்து கொடுக்கும் நாடுகளின் இனவெறித்தனத்தையும் பூசிமெழுகி நியாயப்படுத்தி விட்டனர்.

> "கடலுக்கு கரைகளுண்டு
> நிலவுக்கு உலாவவும், உறங்கவும் வானமுண்டு
> எந்தக் கலைஞருக்கும் காலம் விதிக்கும் எல்லையுண்டு
> அருந்ததி ஏன் போராளியானான்? "

என்கிறது துண்டுப்பிரசுரத்தின் இன்னுமோரு வாக்கியம். அருந்ததியான இந்தத் தயாரிப்பாளர் இப்படத்தைத் தயாரித்ததன் மூலம் போராளியானான் என்பது வரலாற்றில்

➤ 27 பக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மௌனம் 6ல் இனவெறி ஆசிரியர் தலையங்கத்தில்

"சிறிலங்கா அரசினதும், பெரும் தேசிய இன வெறியாளரதும் களிப்பையும், குதூகலத்தையும் இறுமாந்த உரைகளையும் பார்த்தால்.... எல்லாளனை வெற்றிகொண்ட துட்டகைமுனுவின் உள்ளக்கிடக்கையும் இனவெறி வக்கிரத்தையம் பறைசாற்றுகிறது."

இப்படி மௌனம் மௌனமாக இருப்பதாக நடித்தபடி பச்சை இனவாதிகளாக வரலாற்றையே புரட்டிவிடுபவர்களாக மாறியது ஏன்தானோ? புலிகள் கூட இப்படி இவ்வரலாற்றைப் புரட்டியது கிடையாது. எல்லாளன், துட்டகைமுனு இடையிலான யுத்தம் இன அடிப்படையிலானர் என சிங்கள இனவெறியார்களின் வரிசையில் மௌனம் அணிவகுப்பது ஏனோ? எல்லாளன், துட்டகைமுனு யுத்தம் கி.மு (145 - 101) செய்த காலத்தில் தேசிய இனங்களே இருந்திருக்க வில்லை என்ற வரலாறு கூட இந்த போலி மார்க் சியவாதிகளுக்கு ஏன் தெரியாது போனது? தெரிந்து கொள்ள ஈழமுரசில் வெளிவரும் காக்கைவன்னியன் முதல்... மற்றும் புலியின் முக்கிய பிரமுகரான கனடா இராசரத்தினம் எழுதிய தமிழீழமும் நாடும் அரசும் என்ற புத்தகத்தை படித்தாலே உங்கள் மார்க்சிய மூளையின் இனவெறித்தனம் பச்சையாகவே வெளிப்படும். எல்லாளன் படையில் சிங்களவர்களும், துட்டகைமுனுப் படையில் தமிழர்களும் போராடி இருந்ததையும், எல்லாளன் கொல்லப்பட்ட பின் துட்டகைமுனு அவனை மதித்து ஆயிரங்கால் மண்டபத்தை எல்லாளனுக்காக் கட்டி அனைவரையும் கட்டாய வணக்கம் செலுத்தப் பணித்தான். அங்கு இன வேறுபாடு இருக்கவில்லை. ஆனால் மௌனம் பச்சை இனவெறியாக மாறி சிங்கள இன வெறியர்களின் வரிசையில் பின்பக்கமாகப் போய் நின்று கூச்சல் எழுப்புவது ஏனோ? மார்க்சிசத்தை கைவிட்டு அதை பெயருக்கு பிழைப்பு நடத்துபவர்களின் உண்மை முகம் இப்படித்தான் பளீச்சென முகத்திலடிக்கும்.

# மக்களை மந்தைகள் என்போரின் வாக்குமூலங்கள்

சரிநிகர் 92ல் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர் கலாநிதி சிறிதரனின் வாக்குமூலத்தைப் பார்ப்போம்:-

"புலிகளின் பிரதான அரசியல், யுத்தம் யுத்தம் என்பது, தீய சக்தியாக தொழிற்படுவதாகும். புலிகளின் தீய இயல்பு, சிங்கள அரசை மிகவும் பயமுறுத்தலுக்கு உள்ளாக்குகின்றது. இச் செயலினால் சிங்கள, தமிழ் மக்களிடையே நம்பகமற்ற தன்மை ஏற்படுகிறது."

என்று புலம்பும் சிறிதரன் இனவாதிகளின் காவடியாக எல்லாம் புலிகளே எனக் கூறுகின்றார். புலிகளின் தோற்றமும், அதன் அடிப்படையும் இனவாத என்ற சிங்கள அரசு சார்ந்து உருவானதே. தமிழ்-சிங்கள மக்கள் நம்பகமற்ற தன்மை புலிகளுக்கு முன்பே இதே இனவாத அடிப்படையில் இருந்தது. ஆனால் இன்று சந்திரிக்காவின் சீலையில் தொங்கும் கலாநிதிகளான சிறிதரன் புலிகள் மீது குற்றம் சாட்டுவதன் மூலம் தனது இனவெறி பச்சோந்தித் தனத்தை மூடி மறைத்துவிட முடியுமா என்ன? "தமிழ் மக்களுக்கு புலிகளைத் தவிர வேறு வழியில்லையா?" என்று தலைப்பிட்டதன் மூலம் மாற்றுத் தலைமை இனவாத சந்திரிகா அரசே தமிழ் மக்களின் மாற்றுத் தலைமை எனப் பிரகடனம் செய்கின்றனர். சபாஷ்!

மௌனத்தின் ஆசிரியர் தலையங்கத்தில் இன்னுமொரு ஏகாதிபத்தியத்தை நோக்கி அழைக்கும் இன்னுமொரு பொன்மொழிகளைப் பார்ப்போம்.

"இந்த ஐம்பதாம் ஆண்டின் நிறைவின் பின்பு ஐ.நா என்பதானது, வீடுபற்றி எரிந்து முடிந்த பின்னர் வந்துசேரும் ஒரு தீயணைப்புப் படைக்கு மேல் அதன் பங்கையாற்ற முடியாதிருப்பதேன்?"

என்ற கேள்வியை எழுப்பும் மௌனம் கேட்பது என்ன? முன்கூட்டியே தலையிட்டு

www.tamilarangam.net

மறுகாலனியாக்கும் படியே! நீங்கள் இல்லாமல் போனதுதான் இங்கு பிரச்சினைகள். நீங்கள் நெருப்பு எரியும் முன்னமே நெருப்பு அணைக்கும் கருவியுடன் வந்துவிடவேண்டும் என்கின்றனர். எரிப்பவன் யார்? ஐ.நா வை ஆட்டிப்படைக்கும் மேல்நிலை வல்லரசுகளே! நெருப்பை எரியவிட்ட பின், அதில் குளிர்காய்ந்தபின் அணைப்பது போல் நடித்து அங்கிருப்பவைகளை கொள்ளையடிப்பதே ஐ.நாவின் தொழில் இந்த வரலாறு எல்லா சாதாரண அறிவுள்ளோரக்கும் நன்றாகத் தெரியும். சொந்த நாட்டை அடகுவைக்க தயாராக உள்ள மௌனம், எங்கள் நாட்டில் ஐ.நாவை தலையிட மறைமுகமாக மகுடம் ஊதி அழைப்புவிடுகின்றனர். எம்மக்கள் ஒருமுறை ஐ.நாவில் அங்கம் வகிக்கும் இந்தியாப் படைகளின் கொட்டத்தை அடக்குமுறையை அனுபவித்தார்கள். அப்போது இவர்கள் அவர்களின் செல்லப்பிள்ளைகள். இன்று ஐ.நாவைக் கோருவது எம்மக்களை மேலும் அடக்கி ஒடுக்க, தேசிய இன அடையாளத்தை துடைத்தெறிய வகைசெய்யும் ஒரு பச்சைத்துரோகமாகும். ஐ.நா உலகில் மக்களக்காக எதையுமே செய்தது கிடையாது. மாறாக மேல்நிலை வல்லரசுகளை பாதுகாக்கவும், விரல்விட்டு எண்ணக்கூடிய பன்னாட்டு நிதிநிறுவனத்தைப் பாதுகாக்கவும் எல்லாவித ஆக்கிரமிப்பையும் நடத்தும் ஒரு சர்வாதிகார மக்கள் விரோத அமைப்பாகும். போலி மார்க்சிச வேடதாரிகளான மௌனத்தின் முகத்தில் பளீச்சென மின்னும் ஏகாதிபத்திய விசுவாசக் கோரிக்கையாக எழுந்ததே மௌனத்தின் இந்த அங்கலாய்ப்பு.

ராஜீவ் கொலைதொடர்பாக புலிகளின் நிலையற்ற வாக்குமூலங்கள்.

---

* 1991 -06- 12 இந்தியன் எஸ்பிரஸ்சுக்கு கிட்டு வழங்கிய பேட்டியில் கூறியதை சற்றுப் பார்ப்போம்.

தமிழ்நாட்டில் சில தீவிரவாதக் குழுக்கள் செயற்படுகின்றன. அவை அதிகாரபூர்வ பத்திரிகைகள் கூட நடத்துகின்றன. புதிய ஜனநாயகம், புதியகலாச்சாரம் ஆகிய அதி தீவிரவாதப் பத்திரிகைகள் லண்டனில் கூட விநியோகிக்கப்படுகின்றன. ராஜீவின் கொலைகாரன் எனச் சந்தேகிக்கப்படும் குர்தா அணிந்த ஆசாமி அந்தப்பத்திரிகைகளின் நிருபர்களின் ஒருவராக இருக்குமென்று நான் நினைக்கின்றேன்.................... அப்பெண் தமிழ்நாட்டுப் பெண்போலத்தான் தெரிகின்றாள்.

திலகர் ஜூனியவிகடனுக்கு 21-01-1996ல் வழங்கிய பேட்டியில்

சாட்சியங்கள் மறைக்கப்படுகின்றன. அதில் ஈடுபட்ட சில பெரியமனிதர்களின் பெயர்கள் வராமல் பார்த்துக்கொள்ளப்படுகின்றது...... ராஜீவ் கொலை ஒரு ஜோடிக்கப்பட்ட விஷயம்தான்.... ஆனால் தனியாகச் சில ஈழத்தமிழர்கள் சம்மந்தப்படுத்தப் பட்டிருப்பதுதான் வேதனையான விஷயம்
இப்படித் திலகர் கூற, முன்னர் கிட்டு புதிய ஜனநாயகம் மீது பழிகூற நாளைய புலித்தலைவர்கள் எப்படிக் கூறுவர்? எனக் கற்பனைசெய்து பாருங்கள்! அப்போது புரியும் புலிகளின் அரசியலின் நோக்கம்பற்றி.

* அண்மையில் புலிசார்பு ஈழமுரசில் ஒரு வாசகர் ஒருவர் புதியஜனநாயகம் பற்றி கேட்ட கேள்விக்கு ஈழமுரசு கூறியது:- அது ஒரு பார்பான பத்திரிகையென்று. பத்திரிகை வாசிக்காத சினிமா புத்தகம் வாசிக்கும் வாசகர்கள் ஈழமுரசு வாசிப்பவர்களாயின் புதியஜனநாயம் பார்ப்பான பத்திரிகையென நம்பிக்கொண்டிருப்பர் உண்மையைத் தேடுபவர்கள் ஒருக்காலும் ஈழமுரசின் காழ்ப்புணர்ச்சியுடன் கூடிய இப்பொய்யை நம்புவார்களென ஈழமுரசு முட்டாள் தனமான நினைக்கிறதோ?

* மௌனம் 6ல் பிரான்ஸ் மித்திரோன் பற்றி ☐☐இவர் தீவிர வலதுசாரியாகவும் கத்தோலிக்க தேசியவாதியாகவும், சோசலிசவாதியாகவும், மார்க்சிசவாதியாகவும் விளங்கிய இவர் ஐரோப்பிய கூட்டாட்சியை நேசிப்பவராகவும், மதசார்பற்றவராவும் வெளிப்பாட்டைக் கொண்டிருந்தார்☐☐

வாழ்க மௌனத்தின் கணிப்பீடுகள். ஒரு மனிதன் எல்லாமாக ஒரே நேரத்தில் இருப்பது எப்படியோ? எல்லாமாக இருக்க முடியும் என்பதன்னூடாக மாக்சியத்தையே ஏற்றுக் கொண்டால் ஒருவன் மிகுதி எல்லாவற்றையும் கொண்டு அதற்காக செயற்பட முடியும் என்கின்றனர். அதாவது அதை அங்கீகரிக்க மறைமுகமாகக் கோருகின்றனர். அது சரி, பிரான்ஸ் மித்திரோன் ஒரு மாக்சிசவாதியாம் வாழ்க, ஓர் ஏகாதிபத்தியத்தின் ஆட்சிப்பீடத்தில் இருந்து உழைக்கும் மக்களை அடக்கிய ஒரு மக்கள் விரோதியாவான்.

* சரிநிகர் 98ல் "சொந்த மண்ணிலேயே வேறு மனிதனாய்" எனத் தலைப்பிட்ட எஸ்.மனோரஞ்சனின் சிங்கள மொழிபெயர்ப்புக் கட்டுரையில் இருந்தது. யாழ் சென்ற பத்திரிகையாளர் குழுவில் இருந்த இவர் முதற்கோரிக்கையாக இராணுவத்திடம் கேட்டது.

"நான் எனது வீட்டைப் பார்க்க முடியுமா? தற்போது அவ்விடத்தில் வசிக்கும் எனது உறவினர்கள் பற்றி அவருக்குக் கூறினேன். அவ்வீடு நல்லூர் கோவிலில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தைவிட குறைவான தூரத்திலேயே அமைநதிரந்தது.........."

" எனினும் நான் எனது கிராமத்துக்குள்ளே நுழையும் போதே பல வீடுகள் சேதம் அடைந்திருப்பதை கண்ணுற்றேன். இறுதியில் நான் எனது வீட்டைக் கண்டுபிடித்தேன். அங்கு கூரை இருக்கவில்லை. சுவர் வெடித்திருந்தது."

"என்னுடன் இருந்த வீரர்கள் நிலத்தை நோக்கினர். அயலவர்களிடம் அவ்வீட்டில் இருந்தவாகளைப் பற்றி விசாரித்தேன். அயலில் வேறு ஒரு வீட்டில் தங்கியிருப்பதாக அவர்கள் கூறினர்.

" பிரச்சனையில்லை ஆயினும்!"

"நான் அவாகளைக் காணத் தயாராகிக் கொண்டே வீரர்களிடம் கூறினேன் 'நான் தனியே செல்கிறேன்' ...." இல்லை இல்லை நாங்களும் வருகிறோம்........"

அப்படியில்லை இராணுவம் வந்துபோவதை புலிகள் அறிந்தால் அவர்களால் பிரச்சனை ஏற்படுமல்லவா?"

இவ்வாறு திரும்பிச் செல்லும் போது என்னுடன் இருந்த இராணுவ வீரன் இவ்வாறு குறிப்பிட்டான;"

" எனக்குத் துக்கமாக இருந்தது. ஒரு சொல்லாது பேசவில்லையே. கட்டியணைத்து அழுதது மட்டும்தான். எப்படி இந்த மக்கள் வாழ்கின்றாாகள்.....?

www.tamilarangam.net

என ஓர் அழகான கட்டுக்கதையை நல்ல வர்ணனையுடன் மனோரஞ்சன் இணைத்துள்ளார். ஒரு பெரும் தேசிய இனவாதி தனது



ஆக்கிரமிப்பை எப்படி பச்சையாக மறைப்பாரோ அதுபோன்றே மனோரஞ்சனும் செய்துள்ளார். அது சரி பொய் சொல்லப் போனாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் ஜனநாயகவாதி மனோரஞ்சன் அவர்களே!

ஏனெனில் மனோரஞ்சனுக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு வீடு கிடையாது என்பது சிங்கள மக்களுக்குத் தெரியாதுதானே. ஆனால் தமிழ் மக்களுக்கும் இப்படி ரீல் விட முடியுமா?

''இராணுவத்தை நல்லதாக மனிதாபிமான மெச்சத்தக் கவர்களாக காட்ட ஒரு கற்பனை வீட்டை யாழ்ப்பாணத்தில் கட்டிய மனோரஞ்சன் இராணுவம் கூறும்போது நிலத்தை நோக்கினர், எனக்குத் துக்கமாக இருந்தது எனக் கூறிய மனோரஞ்சன் இராணுவம் அங்கு உள்ளோவரின் புலிகள் கொண்டுவிடுவர் தம் உறவினர்களை என்று கூறுவதன் மூலம் சமநிலையைக் கூட இழந்ததைத் தவிர புலிப்பேய் பிடித்த புலி எதிர்ப்பாளராக, சிங்கள இனவாதியாக மாறியதை இந்தப் பொய்க் கட்டுக்கதையே நிறுவிவிடுகிறது. மேலும் ஆதாரம் தேவையா என்ன?

(முகம் சினிமா)
ம் பக்கத் தொடர்...

நகைச்சுவைக்குரிய ஒரு வரியாகும். இதைத் தொடர்ந்துள்ள அடுத்தவரி ''கடந்த காலங்களில் அருந்ததி



பதித்த இலக்கியச் சுவடுகள்: கனதியானவை. பிரான்ஸ் புகலிட இலக்கியம் அருந்ததியைக் கடந்து: இதுவரை எதையும் பதிவு செய்யவில்லை''

என்ற வரிகள் அபத்தமானவை. சொந்தப் புகழ் தேடி தம்மைத்தாம் எழுதும் கூட்டத்துடன் இதுவும் சேர்ந்ததே. அருந்தி ஒரு போராளியாக, இலக்கியத்தில் சாதனையாளனாக மாறியது மாற்றியது என்ற சோகக் கூற்றை ஆராய்வோமாயின் அருந்ததி யார்?

அருந்ததி ஒரு சில நாடகங்களைப் போட்டதுடன், பிரான்சில் வெளியாகிய தேடல் இதழிலும் (7 இதழ்களே வெளிவந்தன), பின் ஒரு கவிதை புத்தகத்தையும் நாம் அறிய வெளியிட்டவர். இந்த அருந்ததி இந்தியன் ஆமி இலங்கையில் இருந்த காலம் வரை, அதை ஆதரித்தும், EPRLF ஐ பாராட்டியும் நின்றவர். இக்காலத்தில் இதற்கு முன்னரும் வெளிவந்தவையே இவையெல்லாம். அதுவும் தேடலில் பல்வேறு சக்திகள் ஒன்றிணைந்து இருந்தாலும், ஈப்பி யை ஆதரித்ததால் அதில் பலர் வெளியேறியதும் வரலாறு. அருந்ததியின் இலக்கியம் அவரின் அன்றைய கருத்துப்போக்குடன் துரோகத்துடன் இணைந்திருந்தது.

எம் மண்ணில் வெளியாகிய புலிகளின் சில படங்கள், அருந்ததியின் முகம் என்பன வெவ்வேறு கோணத்தில் மசாலாத் தன்மையை நிராகதித்ததால் மட்டும் இப் படங்களை வரவேற்க முடியும். ஆனால் கருத்துத் தனத்தில் இப்படங்கள் பாரிய விமர்சனத்துக்குரியதே அருந்ததி போராளியானான் என்பது எமது போராட்டத்தில் ஆயிரமாயிரம் போராளிகள் தம்மை விடுதலைக்காக அர்ப்பணிக்கும் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதற்குச் சமமாகும். யாரோ ஒருவன் போராடி அழிந்துவிட அவன் பெயரால் போராட்டத்தில் ஈடுபடாத பிரிவுகள் அரசைக் கைப்பற்றுவதைப் போல அதன் வழியில் அருந்ததி போராளியானான் என்பது, அவரின் மறுப்பு எதுவுமில்லாத ஒரு வரலாற்றுப் பொய்யுடன் கூடிய பிழைப்புவாத புகழுரைகளே.


ஒரு படைப்பு மக்களுக்காக, சொந்தப் புகழுக்காக அல்லாததாக இருக்க வேண்டும். வரலாற்றைத் திரிக்காததாக தமது நியாயப்படுத்த முடியாத தொழில்களை (இது ஓர் அகதியின் முக்கிய பிரச்சினை) படங்களில் விளக்குவதன் மூலமோ, அகதி நாட்டின் ஆளும் ஆட்சியின் கொடுமைகளைச் சொல்லாமல் நல்ல பிள்ளையாக நடப்பதன் மூலமோ, படைப்பும் படைப்பாளியும் மக்களுடன் இணைந்துவிட முடியாது.

## ஜனநாயகவாதிகளும், மனித உரிமை வாதிகளு மான ஜெர்மனியின் பாசி சங்கள்

ஜெர்மனிய அரசும், அதன் அரசுயந்திர உறுப்புமான பொலிஸ் நாசிஸ்ட்டுக்களின் வாரிசுகள் தான் என்பதை அண்மைய சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை மீளவும் ஒரு முறை தெளிவாக்கியுள்ளது.
5-5-96ல் சர்வதேச மன்னிப்புசபை வெளியிட்ட அறிக்கையில் ஜெர்மனியின் சில பொலிஸ் நிலையங்களின் பெயரைக் குறிப்பிட்டு , அங்கு வெளிநாட்டவர்கள் துன்புறுத்தப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளது.
இது தெரிந்த ஆதாரங்கள் கொண்டவை மட்டுமே. ஆனால் உண்மையில் இதன் கொடூரம் வெளிவராத புதைகுழியாகவே உள்ளது.

www.tamilarangam.net

# சாதிவெறி நிலப்பிரபுத்துவ பயங்கரவாதத்துக்கு பதிலடி தரும் புரட்ச்சியாளர்கள்



பீகார்:-

பீகார் , நிலப்பிரபுத்துவ கொடுகோன்மையும் மேல்சாதி ஆதிக்கவெறியும் கோலோச்சுகின்ற இந்திய மாநிலம் இராஜபுத்திரர்கள், பூமிகார், குர்மி , யாதவ் போன்ற மேல்சாதி நிலப்பிரபுக்களும் , சாதி ஆதிக்க சக்திகளும் தான் கிராமப்புறங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து அதிகாரம் செலுத்தி வருகின்றனர். இவர்களே தேர்தலில் நின்று வெற்றி பெற்று எம். எல். ஏ , எம்பி , மந்திரி பதவிகளை கைப்பற்றிக் கொள்கின்றனர் அரசு அதிகாரிகள். பொலிசு, ஓட்டுக்கட்சித் தலைமை அனைவரும் கைப்பாவைகள் தான்.

இம் மத்திய கால அடக்குமுறையையும் சுரண்டலையும் எதிர்த்து புரட்சிகர இயக்கங்களிலும் , விவசாய சங்கங்களிலும் இணைந்து போராடும் தாழ்த்தப்பட்டவர்களையும் கூலி-ஏழை விவசாயிகளையும் ஒடுக்குவதற்காகவே 'சேனைகள்' என்ற பெயரில் சாதிக்கொரு கொலைப்படைகளை உருவாக்கியுள்ளனர் இந்நிலப்பிரபுக்கள்.

எனவே ஆயுதந்தாங்கிப் படுகொலைகள் புரிந்து வரும் இந்த எதிர்ப்புரட்சிக்கும்பலை எதிர்த்து வரும் நக்சல்பாரிப் புரட்சியாளர்களான மாவோயிச கம்யூனிச மையத்தினர் (எம்.சி..சி) தங்களைத் தற்காத்துக்கொள்ளவும் , நிலப்பிரபுக்களின் நிலங்களையும் , விளைச்சலையும் கைப்பற்றி மறுவிநியோகம் செய்யவும் , தங்களின் செல்வாக்குள்ள பகுதிகளில் வரிவசூல் செய்யவும் , தங்களின் ஆணைகளை-தீர்ப்புகளை அமுல்படுத்தவும் தற்காப்புக்குளுக்களையும் ,கெரில்லாப்படைகளையும் கட்டி போராடி வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 20 ந் திகதியன்று மாவோயிச கம்யூனிச மையத்தின் (எம் .சி .சி) கெரில்லாக் குழுவினைச் சேர்ந்த 200 ற்கு மதிகமான தோழர்கள் இம் மாநிலத்தின் மீது தாக்குதலொன்றை நடாத்தினர். 5 பொலிசார் இத் தாக்குதலின் போது உயிரிழந்ததுடன் பொலீசு நிலையம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. பதினான்கு கைத்துப் பாக்கிகளையும் 1000 சுற்றுக்கான ரவைகளையும் புரட்சியாளர்கள் கைப்பற்றிச்சென்றனர். தாக்குதல் நடந்த பின்பு 'மாவோயிச கம்யூனிச மையம்' வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியில் "பொலீசாரைக் கொல்வது எங்கள் எண்ணமல்ல பொலீசுநிலையத்தை தீக்கிரையாக்குதும் , ஆயுதங்களை கைப்பற்றுவதும் தான் எங்களது திட்டம் . நாங்கள் இன்னும் பல பொலீசாரைக் கொன்றிருக்கமுடியும் ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை நாங்கள் சில பொலீசாரை பிடித்து வைத்திருந்து பின்னர் விடுவித்து விட்டோம். நெருக்கடியான கட்டத்திலும் தற்காப்பிற்காகவும் தான் நாங்கள் தாக்கவேண்டியுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இவ் உண்மைகளை மழுப்பிவிட்டு ஆளும் வர்க்கமும் முதலாளித்துவ பத்திரிகைகளும் மாவோயிச கம்யூனிச மைய புரட்சியாளர்களை 'வன்முறையாளர்கள்' என தூற்றி வருகின்றனர்.

ஆனால் டிகாரி பகுதியைச் சுற்றி வாழும் பெரும்பாலான உழைக்கும் மக்கள் இத்தாக்குதலை ஆதரித்துள்ளனர் . கோன்ச் எனும் கிராமத்தைச்சேர்ந்த ராம்வதார் "நாங்கள் ஒருபோதும் எம்.சி . சி செயல்வீரர்களைக்கண்டு அஞ்சியதில்லை. கிரிமினல்கள் பொலீசுக்காரனாகவோ, அரசியல்வாதியாகவோ , இல்லை சாதாரண நபராகவோ எந்தப்போர்வையிலிருந்தாலும் எம.சி .சி அக்கிரிமினல்களைக் கொன்றொழித்து நன்மை புரிகின்றது" என வெளிப்படையாகவே பத்திரிகைளுக்கு பேட்டியளித்துள்ளார் .

நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் கீழ் அணிதிரண்டுள்ள பீகாரின் கூலி -ஏழை விவசாயிகள் நிலத்திற்காகவும் சனநாயக உரிமைகளுக்காகவும் தான் ஆயுதம் ஏந்தியுள்ளார்கள் . இவ் வர்க்கப் போர் ஒரு புதிய விடியலுக்கானது . எனவே இது நிச்சயமாக ஒரு மாலை நேர விருந்தினைப்போல இருக்கமுடியாது .

நன்றி

தகவல்-புதிய ஜனநாயகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மின்சாரசபை வேலைநிறுத்தம் கொழும்பையும் இலங்கையையும் ஈடாடவைத்துள்ளது


உலகெங்கும் ஒரு குடையின் கீழ் ஆளம் கனவகளுடன், உலகிலுள்ள அனைத்து உற்பத்தியையும் தனியார் மயப்படுத்த உலக முதலாளிகள் கோரிவருகின்றனர். இதன் தொடர்ச்சியில் உலக முதலாளிகளின் தரகு அரசான இலங்கை அரசபீடம் அரசு தொழில் பிரிவுகளை தனியார் மயப்படுத்த முனைப்புப் பெற்றுள்ளனர். இதையடுத்து இலங்கை மின்சாரசபையை தனியார் மயப்படுத்த உள்ளதாக அரசு அறிவித்தது.

இதனால் எழுந்த வேலைநிறுத்தால் மின்சாரம் இல்லாது போனதால், நீர்கூட இன்றி இலங்கை முற்றாகச் செயலிழந்தது. யுத்தமும் அதற்கான ஆக்கிரமிப்பிற்கான பெருந்தொகை பணமும் ஒருபுறம் எரிந்து சாம்பராக, இன்னுமொரு புறம் இவ்வேலைநிறுத்தம் அரசைப் பலவீனப்படுத்தியுள்ளது. வேலைநிறுத்தத்தை தடுக்க அரசு இராணுவ சட்டத்தை அறிவிக்காமல், இராணுவம் பலாத்காரமாக ஊழியர்களை கடத்தி வந்து துப்பாக்கி முனையில் மின் உற்பத்தியைத் தொடங்கியது.

துரோக தொழில் சங்கம் தமது துரோகத்தையும் மீறி இதில் ஈடுபடவேண்டிய அளவுக்க தொழிலாளர்கள் போராட்ட உணர்வு கோரியது. அரசிலுள்ள கட்சிகளில் தொழில்சங்கம் கூட போராடவேண்டிய அளவுக்கு தொழிலாளர் நிலைமை மோசமாகச் செல்கின்றது. கமினிசம் தோற்றுவிட்டது, மக்கள் அதை வெறுக்கின்றனர் என்று கூறி மக்களின் சில பிரிவுகளிடம் சொத்துகளைக் கொடுக்கும் தனியார்மயம்தான் ஜனநாயகம் என எல்லாத் தொடர்புச் சாதனங்களும் மீள மீள ஒப்புவிக்கின்றன. ஆனால் மக்கள் உலகில் எல்லா இடங்களிலும் தனியார்மயத்திற்கு எதிராகப் போராடுவதைக் காணமுடிகின்றது.

மக்கள் சொத்துக்களை அரசு மயமாக்குவதன் மூலம், அதன் சொந்தக்காரராக தாம் மாறவிரும்புகின்றனர். அதற்காகத் தொடர்ந்து போராடுகின்றனர். பிரான்சில் இன்று நடைபெறும் மின்சார, தொலைபேசி தனியார் மயமாக்கல் திட்டம் பலத்த எதிர்ப்பை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது. (உ-ம்) தொலைபேசியில் பத்தாயிரம் கோடி ரூபாய் இலாபம் பெறும் அரசு அதை தனியார் மயமாக்க நினைப்பது ஏனென மக்கள் கேட்கின்றனர்.

இன்று இலங்கையில் எழுந்துள்ள இப் போராட்டம், பல்வேறு போராட்டமும் இலங்கையின் புரட்சிகர நிலைமை கட்டுமீறி செல்வதைக் காட்டுகின்றது. கட்சிகள், தொழில் சங்கங்கள் துரோகமிழைத்த நிலையிலும் மக்கள் தன்னிச்சையாகப் போராடுவதைக் காணமுடிகின்றது. இன்று தேவை ஒரு சரியான கட்சி. தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்த, அதில் ஐக்கியத்தை எந்தளவுக்கு கோருகின்றோமோ அந்தளவுக்கு பிரிவினையும் உண்டென்று எந்த ஒரு கட்சி, . முன்னணி சக்திகளின் வெற்றிடம் கட்சிமூலம் தீர்க்கப்படின் ஒரு புரட்சிக்கான நிலைமைக்குள் இலங்கை நகரும் என்பதை அண்மைய நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.



# மலையகக் கட்சிகளின் இன்னுமோரு துரோகம்

எம்மவர்கள் வடக்கத்தையான் என்று அழைக்கும் மக்கள் பல நூற்றாண்டுகளாக எழுத்திலில்லாத அடிமைகளாக இருக்கவைக்கப்பட்டுள்ளனர். இலங்கை எந்தப் பிரிவு மக்களுக்கு கிடைக்கும் அற்ப சலுகைகள் கூட இந்த மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. இது என்ன ஜனநாயகமோ எனக் கேட்பதுமில்லை. சுரண்டல்காரனின் பார்வையில் இதுதானாம் ஜனநாயகம்!

பலநூற்றாண்டுகளாகத் தொழில் புரியும் இம் மக்கள் வேலைக்கு உத்தரவாதமோ, மாத வருமானமோ, ஓய்வூதிய வசதியோ அற்ற ஓர் அடிமைகள். நூறு வருடங்களுக்கு முன் அமைத்த ஒரு சிறிய மாட்டுத் தொழுவங்களில் வாழும் இம்மக்களின் துன்ப துயங்களோ எண்ணிலடங்காதது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின் இம்மக்கள் பற்றி அக்கறையற்ற எமது தேசிய வீரர்களும், மறுபுறம் இப் போராட்டம் அம் மக்களை மேலும் ஒடுக்குமுறைக்குள் நகர்த்தியுள்ளது. இந்த மக்களில் இருந்து உருவான ஒட்டுண்ணிகள் இம் மக்களின் துயரத்தைப் பயன்படுத்தி தமது அரியணைக் கனவுகளை நிறைவு செய்கின்றனர்.

அண்மையில் நீண்ட பல வருடங்களுக்கு முன் வழங்கிய சம்பள உயர்வை இன்னும் வழங்காது இருந்ததை சுட்டிக்காட்டி மக்கள் போராட முனைந்தனர். இதை தொண்டமான் காங்கிரசும் சந்திரசேகர் மலையக மக்கள் முன்னணியும், அரசில் பங்கு வகிக்கும் இந்நிலையில் இதற்குக் குரல் கொடுத்து, தமது சொந்தச் சலுகைகளைப் பெற்றுக் கொண்டதன் மூலம் இப் போராட்டத்தை அம்போ எனக் கைவிட்டனர். மக்கள் முகத்தை முகத்தைப் பார்த்து குமுறும் அளவுக்கு இத் துரோகம் செயல் போனது. அம்மக்கள் ஒரு சரியான தலைமையில் அணிதிரள அதற்கான தலைமை இன்றி உள்ள நிலை ஒரு சேகமானதே. இதை இலங்கையின் போராட்ட வரலாறு அண்மையில் தீர்க்குமா என்பது கேள்விக்குறியானதே. இந்நிலை தொடரும் வரை மலையக மக்கள் இனவாதத்திற்கு உட்பட்டும் அதேவேளை அதிகூடிய சுரண்டலுக்கு சுரண்டும் பேர்வழிகளும், அவர்கள் தலைவர்கள் மூலமும் தொடரும்.

www.tamilarangam.net

# அன்னிய நிறுவனங்களுக்கு எதிராக கர்நாடக விவசாயிகள் போர்க்கோலம்

இந்திய ஏகாதிபத்தியங்களது நலன்களுக்கு, தேசங்கடந்த பன்னாட்டு நிறுவனங்களின் கொள்கைக்கு கதவை அகலத்திறந்து விட்டுள்ளது இந்திய மக்கள் விரோத அரசு. அந்நிய முதலாளிகள் இந்திய மக்களை சுரண்டவும், இயற்கை வளங்களை சூறையாடி சுற்றுச் சூழலை நாசப்படுத்தவும் ஆரம்பித்துள்ளனர். அன்னியர்களின் இலாபவேட்டையில் தமது வாழக்கையை இழந்து வரும் மக்கள் போர்க்கோலம் பூண்டு வருகின்றனர்.

இந்தியாவின் கர்நாடக மாநில ஜனதா அரசு இப்போது 7 மிகப்பெரிய அந்நியத்தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்காவின் நேரடி முதலீடு கொண்ட "கொஜென்டிரிஸ்" அனல்மின்நிலையம் மட்டுமன்றி அந்நியக்கூட்டுடன் மிகப்பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் கர்நாடகாவின் மங்களூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமது ஆலைகளை நிறுவியுள்ளன.

நாகார்ஜுனா எ.ஃ.கு நிறுவனம் , மங்களூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கிரேசிம் செயற்கை இழை ஆடை நிறுவனம் ,கனரக எ.ஃ.குத் தகடு நிறவனம் , பீ,ஏ,எஸ்,எ.ஃ.ப் சாயத்தொளிற்சாலை ,உஷா இரும்புத்தாது நிறுவனம் குதிரேமூக் இரும்புத்துத்தாது நிறுவனம் முதலான மிகப்பெரிய ஆலைகளின் விளைவாக இப்பகுதியே படிப்படிபடியாக நஞ்சாகி வருகின்றது. ஆலைகளிலிருந்து வெளியேறும் எண்ணெய், கிரீஸ், அமோனியா, பினாயில்,சயனைடு,சலபைடு மற்றும் உலோகத்தாதுக் கழிவுகளின் விளைவாக நேத்ராவதி, குர்புர், சீதாநதி , சுவா்ணநதி ஆகிய ஆறுகள் மாசுபட்டுப்போயுள்ளன. நிலத்தடி நீரும் நஞ்சாகிப்போயுள்ளது.


எல்லாவற்றிற்க்கும் மேலாக இந்நச்சுக்கழிவுகளால் மீன்கள் செத்து மிதப்பதால் மீனவர்களின் வாழக்கையே இன்று கேள்விக்குறியாகிவிட்டது. இது தவிர, இந்நஞ்சுக் கழிவுகளால் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு காடுகளிலுள்ள அரிய விலங்கினங்களும் பூச்சி-பறவையினங்களும் அழிந்து வருவதாகச் சுற்றுச்சூழல்வாதிகள் எச்சரிக்கின்றனர்.

இந்நிலையில் கர்நாடகத்தின் கடற்கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளும், மீனவர்களும் மாநில அரசின் புதிய தொழிற்கொள்கையை எதிர்த்து போர்க்குணத்தோடு போராடி வருகின்றார்கள்.

கடந்த டிசம்பர் 19ந் திகதி முதல் 25ந் திகதி வரை மங்களூர் எண்ணெய் சுத்திகரிப்பு-பெற்ரோலிய நிறுவனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்-பேரணிகளை நடத்திய இம்மக்கள் அந்நிறுவனத்தின் எண்ணெய்க் குழாய்களையும் உடைத்தெறிந்துள்ளனர். தடியடி, துப்பாக்கிச்சூடு நடத்தியும் முன்னணியாளர்கள் 300 பேரைக் கைது செய்தும் பொலிசு அடக்குமுறையை ஏவிய போதிலும் இம்மக்களின் போராட்டத்தை அடக்கமுடியவில்லை.

இந்நிறுவனங்களுக்காக விவசாய நிலங்கள் 2000 ஹெக்டேர் அளவுக்கு விவசாயிகளிடமிருந்து நயவஞ்சகமாக பறிக்கப்பட்டு அவர்களுக்கு உரிய நிவாரண வசதிகள் செய்து தரப்படவில்லை. விளைநிலங்களை அபகரித்து தங்ளை ஏமாற்றிய அரசுக்கு எதிராக விவசாயிகள் ஏற்கனவே போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மத்தி யமாநில அரசுகளின் நாட்டைச் சுடுகாடாக்கும் நாசகார கொள்கையை எதிர்த்து ஏற்கனவே "கார்கில;" விதை நிறுவனம் , "கெண்டகி" கோழி இறைச்சி நிறுவனங்களைத் தாக்கியழித்த கர்நாடக விவசாயிகள் இப்போது ஏகாதிபத்தியக் கூட்டுடன் நிறுவப்பட்டுள்ள நச்சுக்கழிவு ஆலைகளுக்கெதிராக தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றார்கள்.

நன்றி - புதிய ஜனநாயகம்.



## வாசகருடன் நாம்

தவிர்க்க முடியாத காரணங்கள் இவ்விதழ் மிகத் தாமதமாக வெளிவந்துள்ளது. இனிவரும் இதழ்களில் இவ்வாறான தாமதங்களை தவிர்க்க முடிந்தவரை முயற்சி செய்கின்றோம். வாசகச் சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

ஆர்-கு

www.tamilarangam.net



# இசை!
# இது உழைக்கும் மக்களின் இசை!

தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டம் இன்று பாரிய பின்னடைவை சந்தித்துக் கொண்டு இருக்கும் நிலையில் நாம் எம்மை, எமது கடந்த கால அரசியலையும் மறு பரிசீலனை செய்யவேண்டிய நிலையில்.....
ஓர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் அளவுக்கு நாம் முன்னேறிய போதும், எமது தேசிய அடையாங்களை, எம் மக்களின் கடந்த கால பரட்சிகர நிலையை, அதன் ஆழ்ந்த அர்த்தத்துடன் கூடிய எல்லா அம்சங்களையும் நாம் ஆய்வு செய்தது கிடையாது.

இந்தியாவில் பிரதான முரண்பாடு வர்க்க போராட்டமாக உள்ள நிலையிலும், தமிழ் நாட்டு மக்கள் கலை இலக்கியக் கழகம் தமிழ் இசை பற்றியும், அதன் போக்குணாம்சத்தை வெளிப்படுத்தும் அளவிற்கு எமது ஆயுதப்போராட்டம் எழுப்பியது கிடையாது. நாம் அவர்களிடம் நிறையவே கற்க வேண்டியுள்ளது. அதைக் கற்றுக் கொள்ள அவர்களின் 'கசெட்டுக்களைக் கேட்டுப்பாருங்கள்!

1 தமிழ் மக்கள் இசை தொடர்பான 7 கசெட்டுக்கள்.


2 தமிழ் இசையின் தொடர்ச்சியில் வெளிவந்த 5 கசெட்டுக்கள். ஒரு கூலி உழைப்பாளி முதல், ஏகாதிபத்தியம் ஈடாக உள்ளடங்கிய பாடல்கள்.

3 மற்றும் எல்லாவித முற்போக்கு நூல்களுக்கும்



இன்றே எம்முடன் தொர்பு கொள்ளுங்கள்!!

## எமது தொர்பு முகவரி:-



**'Samar'**
**87, Rue de colombes**
**92600 Asnieres sur seine**
**FRANCE**

- **கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் மாபெரும் சக்தியாக உருவாகும்**

- **வெகுஜனத் தொடர்பு என்பது வெடிகுண்டிலும் வலிமையானது.**

www.tamilarangam.net






நக்சல்பாரி இயக்க வரலாற்றில் எழுந்துவரும் புரச்சிகர அலைவீச்சுக்கள் இந்தியா எங்கிலுமே விரிந்து பரந்து எழுச்சி பெற்று வருகின்றது. இதன் தொடர்ச்சியில் 'அனைத்து இந்திய புரட்சிகர பண்பாட்டு இயக்கம்' தனது ஆறாவது மாநாட்டை ஆகஸ்ட் 9,10,11 களில் சென்னையில் நடத்துகின்றது. இந்தியா எங்குமுள்ள புரட்சிகர பண்பாட்டு இயக்கங்கள் இணைந்து நடத்தும் இந்நிகழ்ச்சி, இந்திய உழைக்கும் மக்கள் பண்பாட்டையும், அன் போர்க்குணாம்சத்தையும் உயர்த்தி, உலகுக்கு வழிகாட்ட முனையும் புரட்சிகர பண்பாட்டை அதன் போர்க்குணாம்சத்தைக் கண்டு நாம் புது வேகம் கொள்கின்றோம். உலகப் புரட்சியில் ஓர் அங்கமாக எழுச்சி பெறும் இப் பண்பாட்டு நிகழ்ச்சிகள் வெற்றி பெற, விட்டுக் கொடுக்காத உழைக்கும் மக்களின் புரட்சிகர வெற்றி கான இம் மாநாடு வெற்றி பெற எமது புரட்சிகர வாத்துக்கள்.

**வாசகர்களே!** உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும் ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர் பார்க்கின்றோம்.

**சந்தாவுக்கான அன்பளிப்பு** . – ஐரோப்பிய நாடுகள் 6 பிரதிகள் 100F 12 பிரதிகள் 200 F , 12 பிரதிகள் 200 F ஏனைய நாடுகள் 12 பிரதிகள் 225 F



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்